
# ஸ்ரீ லங்கா


அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் : 13 இதழ் : 5 ஏப்ரல், 1961 விலை : சதம் 15



மகாவலி கங்கை

# அட்டைப் படம்



இலங்கையிலுள்ள மிகப் பெரிய நதி மகாவலி கங்கை யாகும். 120 மைல் நீளமான இந்நதி கிழக்கு மாகாணத்தில் கடலோடு சங்கமமாகிறது. எக்காலமும் வற்றாத தன்மையுள்ள இந்நதியின் நீர் நன்கு உபயோகப்படுத்தப் படாத காரணத்தால் வீணாகிப் போவதைக் கண்ட அரசாங்கம் மகாவலி கங்கைப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டமொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துவருகிறது. அமெரிக்க பொறியியலாளர்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் மகாவலி கங்கைநீர் வடமத்திய மாகாணத்துக்குத் திருப்பிவிடப் படும். இதன்பொருட்டு கண்டிக்கு அண்மையில் இந்நதியின் குறுக்கே ஓர் அணைக்கட்டு நிறுவப்படும். மகாவலிகங்கை நீரை மின்சார உற்பத்திக்கு உபயோகப் படுத்தவும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் பொருளாதார வளத்துக்கும் இயற்கை வனப்புக்கும் பெரிதும் உதவும் மகாவலிகங்கை குண்டசாலைக்கு அண்மையில் ஓரிடத்தில் பாயும் காட்சியை அட்டைப்படம் சித்திரிக்கிறது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொது நலவமைப்புப் பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் .. | 3 |
| 2. | கௌரவ பிரதம மந்திரி அவர்களின் புதுவருடச் செய்தி .. .. | 8 |
| 3. | பத்து வருடத்திட்டமும் கைத்தொழில் விருத்தியும் .. .. | 9 |
| 4. | கவி இன்பம் .. .. .. .. | 12 |
| 5. | புத்தாண்டுத் தீர்மானம் .. .. .. .. | 15 |
| 6. | ஆடும் பெருமான் .. .. .. .. | 16 |
| 7. | பொலநறுவைப் பிள்ளையார் .. .. .. .. | 20 |
| 8. | மரமறுக்கும் மூன்று ஆலைகள் .. .. .. | 22 |
| 9. | நாக வழிபாடு .. .. .. .. | 24 |
| 10. | நல்லூரில் பங்குனி உத்திரம் .. .. .. | 28 |
| 11. | புத்தாண்டு வாழ்த்து .. .. .. .. | 30 |


ஜே. என். ஆர் 16757—5,608 (4/61) அரசாங்க அச்சகம், இலங்கை.



இலங்கைப் பிரதமரும் இதர பிரதமர்களும் மாட்சிமை தங்கிய எலிஸபெத் மகாராணியுடன் படம்பிடித்துக் கொண்டனர்.

# பொதுநலவமைப்புப் பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர்

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மார்ச் மாதம் லண்டனில் நடைபெற்ற பொதுநலவமைப்புப் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டதோடு இலங்கைக்கு வெளியே தமது முதலாவது அரசியல் தூதை மேற்கொண்டார். இவர் பிரதம மந்திரியாகப் பதவியேற்றபின் ஐக்கிய இராச்சியத்துக்கு விஜயஞ் செய்தது இதுவே முதற் தடவை. பொதுநல வமைப்பு நாடுகளின் விஷயத்தில், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொதுநல வமைப்புத் தலைவர்களின் வருடாந்தக் கூட்டங்களில் ஒரு பெண்மணி கலந்து கொண்டது இதுவே முதன் முறையாகும்.

மேலும் 1956 ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இக் கூட்டத்தில் கலந்து கொண்டதற்குப் பின் இலங்கைப் பிரதமர் என்ற முறையில் ஒருவர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டதும் இதுவே முதற் தடவையாகும்.

பொதுநலவமைப்பு நாடுகளின் சரித்திரத்திலேயே இவ்வருடம் நடைபெற்ற கூட்டமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பொதுநலவமைப்பு நாடுகள் என்ற கருத்துக்குப் புதியதும் குறிப்பிடத் தக்கதுமான வியாக்கியானத்தை அது அளித்ததோடு பிரிட்டனுடன் சரித்திரக் காரணங்களுக்காகவே

முக்கியமாக உறவு கொண்டுள்ள பல நாடுகளின் சங்கம் என்ற தன்மையிலிருந்து குறிப்பாக அடிப் படை நாகரீக கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் இணக் கம் கொண்டுள்ள நாடுகளின் சங்கம் என்று அது மாற்ற மடைந்துள்ளதும் வலியுறுத்தப்பட்டது.

உலக ஆயுதப்பரிகரணத்துக்கான யோசனை களைச் சமர்ப்பித்ததோடு பொதுநலவமைப்பு நாடு கள் ஒரு சர்வ தேச ஸ்தாபனமாக அபிவிருத்தி யடைதற்கும் அது புதிய வழிவகைகளை ஏற்படுத்தி யுள்ளது. "வெளிநாட்டுக் கொள்கைத் துறை யில் பொதுநலவமைப்பு அரசாங்கங்களின் தலைவர் கள் பொதுவாக நடவடிக்கை எடுப்பதென்று கூட்டாக வும் பகிரங்கமாகவும் ஏகோபித்தும் சங்கற்பம் செய்து கொண்டது இதுவே முதற்தடவையாகும்" என்று பிரிட்டிஷ் விமர்சகர் ஒருவர் வர்ணித் துள்ளார்.

பொதுநலவமைப்பு நாடுகளின் தலைவர்கள் பல தரப்பட்ட விஷயங்கள் பற்றி விவாதித்தார்கள். ஆயுதப் பரிகரணம், தென்னுபிரிக்க நிறத்துவேஷக் கொள்கை ஆகியவற்றோடு கொங்கோ, லாவோஸ் ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிலைமை, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அமைப்பு, சீனமக்கள் குடியரசை ஐ. நாவில் அனுமதித்தல், பொது நலவமைப்பு நாடுகளின் அங்கத்துவம் முதலிய விஷயங்களைப் பற்றியும் பிரதமர்கள் விவாதித்தார் கள்.

நிதி மந்திரியும் பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா லண்டனிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. ஜி. டி சொய்ஸா, பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். எப். டி. எஸ். ஜயரத்தின, பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு. சி. குணசிங்கம் ஆகியோர் இப்பேச்சுவார்த்தைகளின் போது பிரதம மந்திரி அவர்களுக்கு உதவிபுரிந்தார் கள்.

பிரதம மந்திரியின் 12 வயதுப் புதல்வன் அனு ராவும், நிதி அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசி யான அவரது மனைவியும் பிரதம மந்திரியின் அந் தரங்கக் காரியதரிசி டாக்டர் எம். ரத்வத்தையும் பிர தமருடன் லண்டனுக்குச் சென்றிருந்தார்கள்.

மகாநாட்டில் கலந்து கொண்ட திருமதி பண்டார நாயக்கா அவர்களின் திறமையையும் சாதுரியத் தையும் குறித்துப் பல புகழ்மாலைகள் அவருக்குச் சூட்டப்பட்டன. "இம்மகாநாடுகளில் கலந்து கொண்ட முதலாவது பெண்மணியான திருமதி பண்டாரநாயக்கா எல்லோர் மனதையும் பெரிதும் கவர்ந்தார்" என்று முதல் நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அறிவித்த லண்டன் "டெய்லி டெலிகிறுப்" பத்திரிகையின் பொதுநலவமைப்பு நாடுகளின் நிருபர் எழுதினர். "அவர் உண்மை யில் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக விளங்கி னர்" என்று இம்மாகாநாட்டில் கலந்து கொண்ட ஒருவர் கூறினர்.


**குதூகல வரவேற்பு**

திருமதி பண்டாரநாயக்கா அவர்களை பிரிட்டிஷ் மக்கள் குதூகலத்துடன் வரவேற்றார்கள். வாழ்த் துக் கடிதங்களும் தந்திகளும் அவர் தங்கியிருந்த ஹோட்டலில் வந்து குவிந்து கொண்டேயிருந்தன. பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்களிட மிருந்தும் ஸ்தாபனங்களிலிருந்தும் குறிப்பாக, பிரதம மந்திரியாகப் பதவியேற்ற முதலாவது பெண்மணியின் வெற்றியினல் உற்சாகமூட்டப்பட்ட பிரிட்டன் பூராவுமுள்ள பல்வேறு மகளிர் ஸ்தா பனங்களிலிருந்து இவை வந்து சேர்ந்தன.

பிரதம மந்திரி அவர்கள் மார்ச் மாதம் 5 ந் திகதியன்று லண்டன் விமான நிலையத்தில் வந் திறங்கியதிலிருந்து பத்திரிகைகளினதும் வானொலி யினதும் டெலிவிஷனினதும் கவனம் அதிக மாக அவர்பால் சென்றது. லண்டன் "ஒப்சேர்வர்" பத்திரிகை ஒழுங்காகப் பிரசுரித்துவரும் "பிரமு கர்" பக்கத்துக்கு லண்டன் வந்து சேர்ந்த பொது நலவமைப்பு நாடுகளின் பிரமுகர்களில் திருமதி பண்டாரநாயக்கா அவர்களையே தேர்ந்தெடுத்தது. இதர பல பத்திரிகைகள் இவரது லண்டன் விஜ யத்தை விசேஷ கட்டுரைகள் வாயிலாக பிரபல்யப் படுத்தின. பி. பி. ஸி. நிலையம் மகாநாடு ஆரம்ப மாவதற்கு முந்தின தினத்தன்று ஒலிபரப்பிய ஒரு விசேஷ நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார். உத்தியோகபூர்வமான அலுவல்கள் பல இருந்தமை யால் பிரிட்டிஷ், பொது நலவமைப்பு நாடுகள், அந்நிய நாடுகள் முதலியவற்றின் பத்திரிகை, வானொலி, டெலிவிஷன் பேட்டிகளுக்கான கோரிக் கைகளை நிராகரிக்க வேண்டியிருந்தது.

**விஹாரைக்கு விஜயம்**

மார்ச் மாதம் 6 ந் திகதியன்று காலை லண்ட னிலுள்ள பௌத்த விஹாரைக்கு விஜயஞ் செய் ததே பிரதமர் லண்டனில் மேற்கொண்ட முதலா



இலங்கைப் பிரதமர் லண்டன் விமான நிலையத்தில் வந்திறங்கிய காட்சி.

வது விஜயமாகும். அநேக இலங்கையரும் இதர பௌத்தர்களும் விகாரையில் பிரதமருடன் சேர்ந்து பிரார்த்தனை செய்தார்கள்.

திருமதி பண்டாரநாயக்கா, விகாரையிலிருந்து புறப்பட்டு பொதுநலவமைப்பு நாடுகளின் உறவு மந்திரி திரு. டங்கன் சான்டீஸ் அவர்களுடன் பகல் போஜனம் அருந்துவதற்குச் சென்றார்கள். அதே தினத்தன்று பிற்பகல் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலனைச் சந்தித்தார்கள்.

மார்ச் மாதம் **7** ந் திகதியன்று திருமதி பண்டாரநாயக்காவை கௌரவிக்கும் பொருட்டு ஐக்கிய இராச்சியத்திலுள்ள இலங்கை மகளிர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வரவேற்பில் அவர் கலந்து கொண்டார். இவ்வரவேற்புபசாரத்தில் அவர் ஐக்கிய ராச்சியத்திலுள்ள மகளிர் ஸ்தாபனங்கள் பலவற்றின் பிரதிநிதிகளையும் பல்வேறு துறைகளிலும் புகழ் ஈட்டிக் கொண்டுள்ள பிரிட்டிஷ் பெண்மணிகளையும் சந்தித்தார். பிரிட்டனின் ஆரம்ப பெண் உரிமை இயக்கத்தின் அங்கத்தவர்கள் பலர் இவ்வரவேற்புபசாரத்தில் கலந்து கொண்டது ஒரு விசேஷ அம்சமாக விளங்கியது. திருமதி பண்டாரநாயக்காவின் சாதனை பற்றியும் உலக பெண்மணிகள் அனைவருக்கும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் இவர்களிலொருவர் மிகவும் உருக்கமான ஓர் உரை நிகழ்த்தினார்.

திருமதி சிறீமா ப்ண்டாரநாயக்காவுடன் உலகப் புகழ் பெற்ற அரசியல் விற்பன்னர்கள் இம்மகாநாட்டில் பங்கு பற்றினர். மார்ச் 8 ந் தேதி தொடங்கிய பிரதமர் மகாநாட்டில் இங்கிலாந்தின் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மில்லன், கானாவின் ஜனாதிபதி திரு. நிக்குருமா, பாகிஸ்தான் ஜனாதிபதி திரு. அயூப்கான், பாரதப் பிரதமர் திரு. ஜவஹர்

**லண்டன் மகளிர் சங்க மகாநாட்டில் பிரதமர் சொற்பொழிவாற்றுகிறார்.**



லால் நேரு, கனேடியப் பிரதமர் திரு. டீபன் பேக்கர், ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. மென் சீஸ், நியூசீலந்துப் பிரதமர் திரு. ஹொலியோக், தென்னுபிரிக்கப் பிரதமர் டாக்டர் வேர்வூட், மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ரெஹ்மான், நைசீரியப் பிரதமர் சேர் அபூபக்கா பாலேவா, ரொடேஷியப் பிரதமர் ரோய் வெலென்ஸ்கி, சைப்பிரஸ் ஜனுதிபதி ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் என்பவர்களும் பங்குபற்றினர்.

பிரதமர் சிறீமாவோ மார்ச் 15 ந் தேதி பக்கிங் ஹாம் மாளிகையில் எலிஸபெத் அரசியாரைச் சந்தித்தார். அதற்கடுத்தநாள் எலிஸபெத் அரசி யார் தமது மாளிகையில் அளித்த விருந்திலும் அவர் கலந்து கொண்டார்.

பிரதமர் சிறீமாவோ இந்தியப் பிரதமர் நேரு வின் விருந்தாளியாக காலையுணவு அருந்திஞர். காஞவின் நிக்குருமா அவர்களுடன் மதிய போசன விருந்தில் கலந்து கொண்டார்.

மார்ச் 12 ந் திகதி பிரதமர் சிறீமா பண்டார நாயக்கா ஒகஸ்போர்ட் பல்கலைக் கழகத்துக்குச் சென்ருர். அங்குதான் காலஞ்சென்ற பிரதமர் தமது சொல்வன்மையை வளர்த்து சிறந்த பிரசங்கியா ஞர். இப்பல்கலைக் கழகம் பின்ஞல் தனது புகழ் மிக்க மாணவனைக் கௌரவித்து அவர் படத்தை யும் அங்கு தொங்கவிட்டிருக்கிறது. பிரதமர் சிறீமா அப்படத்தைச் சென்று பார்த்தார். பண்டாரநாயக்கா

(11 ம் பக்கம் பார்க்க)

இரத்மலானை விமான நிலையத்தில் இலங்கைப் பிரதமர் வந்திறங்கியபோது மகாதேசாதிபதி பிரதமரை வரவேற்கிருர்.



# கௌரவ பிரதம மந்திரி அவர்களின் புதுவருடச் செய்தி

எனது அரசாங்கம் பதவியேற்றபின் கொண்டாடப் படும் முதலாவது தேசீயப் புத்தாண்டு தினத்தில், மக்களுக்குச் சில வார்த்தைகள் கூறுவது எனது கடமையென்று கருதுகிறேன்.

முதலாவதாக, இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக முயற்சியும் கடுமையான உழைப்பும் முன்பு எப்போதும் இருந்ததைவிட, உதித்திருக்கும் இவ்வாண்டில் அதிகமாகத்தேவைப் படும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இவ்வாண்டு எந்த வகையிலும் ஒரு சுலபமான ஆண்டாக இருக்காது. அதற்குமாறாக உழைப்பு, துன்பம், இக்கட்டு, தியாகம் ஆகியவற்றைக் கொண்ட ஆண்டாக இருக்கும்.

எமது நாட்டின் சுதந்திரத்தில், பல காரணங் களால் எமது மக்கள் அளவற்ற துன்பமும் தியாகமும் செய்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு. துன்பமும் கடுந்துயரும் சூழ்ந்த இத்தகைய காலங் களில்தான் ஒருமுறைக்குமேல் எமது நாடும் சமுதா யமும் ஒன்றுபட்டு, வலுப்பெற்று சமாதானமும் செழுமையும் நிறைந்த காலத்தைத் தோற்றுவித்துள் ளன. வரும் ஆண்டு அத்தகைய துன்பமும் கடுந்துயரும் சூழ்ந்த ஆண்டாக இருக்குமென்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில், தன்னலமற்ற எளிமையான வாழ்க்கையின் அவசியத்தை நான் வலியுறுத்த வேண்டும். இதுவரை, வாழ்க்கையின் நலன்களை அனுபவித்தவர்கள் அதே நலன்களை இதுவரை அனுபவியாதவர்களுக்காகத் தியாகஞ்செய்வது விரும்பத்தக்கது. அதிகமானவர்களின் அதிக நலத்துக்காக எதையாவது தியாகஞ்செய்யுமாறு நான் உங்களில் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள் கிறேன்.

சுதந்திரத்தின் உண்மைப்பலன்களை அடைய முடியாததற்குள்ள காரணங்களில் ஒன்று, அதனை அடைவதற்குச் செய்யப்பட்ட தியாகமும் போராட் டமும் மிகக் குறைவாயிருந்ததேயாகும். தியாகத்தா லும் கடுமையான உழைப்பாலும் நாடு முழுமைக்கும் நன்மையே விளையும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

இந்நாட்டின் ஒற்றுமையை எப்படியும் காப்பதே எனது அரசாங்கத்தின் கொள்கை என்பதை இப்புனித நாளில் மீண்டும் எடுத்துக்கூறுவது எனது கடமையாகும். அரசாங்கத்தின் பணிகளில் மிக அவசரமானதும் மிக முக்கியமானதுமான பொரு ளாதாரத் திட்டத்தை அமுலாக்கும் பணியை குழப் பங்களுக்கிடையே நிறைவேற்றுவது மிகக் கஷ்டமா னது என்பதை நன்கு அறிந்து கொண்டே, எம் மிடையே சில தவறான பாதையில் நடத்திச் செல்லப்படும் ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் குழப்பத்தை விளைவிக்க முயல்கிறார்கள் என்று கூற நான் வருத்தப்படுகிறேன். எமது நாடு சிறிய நாடு. முன்னேற்றமடையாத நாடு. அரசியல் பகுதிகளாகவோ, இனச்சார்பான பிரிவுகளாகவோ பிரிக்கப்படுவதற்கு அது மிகச்சிறியது. இந்நாடு–இந்நாடு முழுதும்–இலங்கையருக்குச் சொந்தமானது. அவர்கள் சிங்களவராயினும் தமிழராயினும் இஸ்லாமியராயினும் அல்லது ஒல்லாந்தராயினுஞ் சரியே. இந்நாட்டை இன, மொழி அல்லது சமூக அடிப்படையில் பிரிப்பதை அரசாங்கம் கடைசி வரை எதிர்க்கும்.

இத்தேசீய ஒற்றுமை என்னும் உறுதியான அத்திவாரத்தில், தனது பொருளாதார அபி விருத்தித்திட்டத்தை மேற்கொண்டு ஊக்கத் துடன் முன்னேறுவது எனது அரசாங்கத்தின் கருத்தாகும். கடைசியாக, நான் நாட்டுமக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியில் கூறியதுபோல, எனது முழு நேரத்தையும் சக்தியையும் இப் பணியில் செலவிட முயல்வேன். இப்பணிக்கு என் நேரத்தைச் செலவிட உதவுமாறு எனது மக்களை நான் மனப்பூர்வமாக வேண்டுகிறேன். இதனோடு ஒப்பிடும்போது வேறெந்த விஷயமும் முக்கியமற்றதாகும். அவற்றை எனது அமைச்சர் கள், பகுதித் தலைவர்கள், அவ்வத்தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள், அல்லது அர சாங்க அதிபர்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். எம்முடைய நாட்டைப் போன்ற முன் னேற்றமடையாத ஒருநாட்டின் பிரதம மந்திரிக்கு அரசாங்கத்தின் முக்கிய பணியாக நாட்டின் பொரு ளாதார முன்னேற்றத்தில் முழு நேரமும் செல வழிக்க அவகாசமளிக்கப்படல் வேண்டும்.

(21 ம் பக்கம் பார்க்க)

# பத்து வருடத் திட்டமும் கைத்தொழில் விருத்தியும்

கலாநிதி பொன். விக்னராஜா

வறிய நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியைப் பற்றி ஆலோசிப்பது அவசியமாக இருக்கிறது. இதனை பொருளாதார அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் ஆலோசித்தால் மாத்திரம் போதாது. மக்களும் இதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள தேசிய திட்டச் சபை 1959 ஜூன் மாதம் பத்து வருடத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொடுத்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். அரசாங்கத்தின் பரிசீலனைக்காக,அடுத்த பத்து வருட காலத்திலும், இலங்கையின் பொருளாதாரத்துக்கு முக்கியமான அபிவிருத்தி சாத்தியங்கள் திட்டத்தில் தரப்பட்டுள்ளன. விவசாய உற்பத்திப் பெருக்கம், கடற்றொழில் விருத்தி, போக்குவரத்து வசதிகள், அதிக சுகாதார கல்வி வசதிகள், ஆகியவற்றுக்கு பத்து வருடத் திட்டத்தில் வகைசெய்யப் பட்டிருப்பதுடன், கைத்தொழில், அபிவிருத்திக்கும் அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கு திட்டத்தின் எல்லா அம்சங்களையும் ஆராய்தல் சாத்தியமில்லை. எனவே கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமான பொது அம்சங்கள் சிலவற்றைக் கவனிப்போம். இப் பிரச்னை திட்டத்தில் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது என்பதை நீங்கள் அறியவும் அது உதவியாக இருக்கும். அபிவிருத்தி குறைவான நாடுகள்—பெரும் அளவில் விவசாய நாடுகளாக இருந்தவை, இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பிறகு, கைத்தொழில் விருத்தியை வேகப்படுத்தத் தொடங்கி உள்ளன. குடியேற்ற ஆட்சிக் காலங்களில் தொடக்கப்பட்ட விவசாய விருத்தி முறையை அபிவிருத்தி குறைவான நாடுகளில் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று, உச்ச அபிவிருத்தி அடைந்த நாடுகளைச் சேர்ந்த பொருளாதார அறிஞர்கள் நினைத்த காலமும் உண்டு. அவர்களில் சிலர் இன்னும் அப்படியே தான் நினைக்கிறார்கள். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கண்ட அனுபவங்களை வைத்துக்கொண்டு, குறித்த சில சித்தாந்தங்களை வகுத்து, தமது வாதம் சரி எனக் காட்டவும் முயற்சி செய்கிறார்கள். ஆயினும், கடந்த பத்து வருடங்களில், அபிவிருத்தி குறைவான நாடுகளைச் சேர்ந்த பொருளாதார அறிஞர்கள், தமது பிரச்சனைகளைப் பற்றி அதிகம் அறிந்திருக்கிறார்கள். எங்கள் பொருளாதாரக் கொள்கையை வகுக்க, மற்றவர்களின் சித்தாந்தங்கள் வழிகாட்டியாக உதவாது என்பதும் இவர்கள் கருத்து.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல், வேலையில்லாப் பிரச்சனையை போக்குதல், பொருளாதார ஸ்திர நிலையை அதிகரித்தல் போன்ற பிரச்சனைகளை, அபிவிருத்தி குறைந்த நாடுகளிலிருந்து போக்கக் கணிசமான கைத்தொழில் விருத்தித் துறையை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதும் உணரப்படுகிறது.

இலங்கையின் சனத்தொகை வருடாந்தம் 2 தசம் 8 சத வீதம் உயர்கிறது. உலகிலேயே உள்ள உயர் வீதத்தில் இதுவும் ஒன்று. மக்கள் தொகைபெருக அவர்கள் செய்வதற்கு வேலை வாய்ப்புகளும் பெருக வேண்டும். இப்போதே கணிசமான பேர் வேலை இல்லாதும் இருக்கின்றனர். அவர்களுக்கும் வேலை கிடைக்க வழி செய்ய வேண்டும். விவசாய விருத்தி மாத்திரம் மக்களுக்கு வேலை வாய்ப்பைத் தராது. அதனால், அபிவிருத்தி ஏற்படுத்த மாற்று வழிகளிலும் கவனம் செலுத்த வேண்டும். கைத்தொழிலை விருத்தி செய்தல் அத்தகைய மாற்று வழிகளில் ஒன்று. விவசாய விருத்தியின் விஸ்தரிப்பு போதிய நிலம் இல்லாததால் மட்டுப்படுகிறது. கைத்தொழில் விருத்தியில், எல்லையற்ற விஸ்தரிப்பு ஏற்படும் சாத்தியங்கள் உண்டு. இது ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இயங்கும் தன்மை வாய்ந்தது.

ஒருவருக்கான உற்பத்தி வீதத்தின் பெறுமதி, விவசாயத்திலும் பார்க்க கைத்தொழிலில் உயர்வாக இருக்க முடிகிறது. இதனால் நாளடைவில் மக்களுக்கு உயர்ந்த வருமானம் கிடைக்க முடிகிறது. வறிய நாடு ஒன்று, இத்தகைய அபிவிருத்தி முறையை பின்பற்ற இது இன்னும் ஒரு நியாயம் ஆகிறது.

விவசாய தேசம் ஒன்று, குறிப்பாக, ஏற்றுமதிக்காக சில பயிர்கள் உற்பத்தி செய்யும் தேசம் ஒன்று,

மற்ற நாடுகளில் உள்ள நிலைமைகளால் பாதிக் கப்படலாம். இதனைத் தடுக்க முடியாதும் போக லாம். இவ்வாறு ஏற்படும் நிலையின்மை, அத்தகைய நாடுகளுக்கு பல பிரச்சனைகளை உண்டாக்கலாம். கைத் தொழில் விருத்தி, பொருளாதாரம் பலமுகப்பட உதவுகிறது. வெளி நாடுகளில், பொருளாதார மந்தநிலை போன்ற கஷ்ட நிலைகள் தோன்றும் போது, அந்த நாடுகளில் அதிகம் தங்கி நிற்காது இருக்கவும் முடிகிறது.

கைத்தொழில் விருத்திக்காகச் செய்யப்படும் இந்த வாதங்கள் எல்லாம், பொருளாதாரத் துறையில் விவசாய விருத்திக்கு உள்ள முக்கியத்தை எந்த வகையிலும் குறைக்கவில்லை என்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன்.

மக்களுக்கு உணவு கொடுப்பதற்கு மாத்திரம் அல்லாது, கைத்தொழில் விருத்திக்கு மூலப் பொருட்களை தருவதற்கும் விவசாய விருத்தி அவசி யம். மேலும், ஒரு தேசத்தில் முன்னரே ஓரளவு விவசாய விருத்தி இருந்தால், புதிதாக கைத் தொழில் துறையை விஸ்தரித்தல் சுலபம். ஆயினும் நாளடைவில் சம அபிவிருத்தியை உண்டாக்க இரண்டு துறைகளையும் விருத்தி செய்யவே வேண் டும். இதன்படி, முழுத் திட்டத்தில் பொருளாதாரத் தின் இந்த இரண்டு துறைகளையும் விருத்தி செய்வ தில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

---

கைத்தொழில் விருத்தி ஓரளவு சிக்கல் நிறைந் தது. இதனால் தான் கடந்த காலத்தில் கைத் தொழில் அபிவிருத்தி தானாகவே நடைபெற வில்லை. அபிவிருத்தி குறைவான பல நாடுகளில் கைத்தொழில் விருத்தியை தொடங்குவதற்கு அர சாங்கம் ஆதரவும் உதவியும் கொடுக்க வேண்டும். இதனால் திட்டமிடும் விஷயமும் எழுகிறது. அபி விருத்தி குறைவான நாடுகளின் சூழ்நிலைகள் அத் தகையதாக இருப்பதால், உணர்ந்து முயற்சி செய்யா விட்டால், கைத்தொழில் விருத்திக்கு இயற்கை வளத்தைத் திருப்புவதில் வெற்றி காண முடியாது. அதற்காக, கைத்தொழில் முயற்சிகள் எல்லாவற்றையும் அரசாங்கமே நிறுவி, நடத்தி, சொந்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ப தல்ல. சில தேசங்களில், உதாரணமாக சோவியத் ரஷ்யாவில் திட்டங்கள் வெகுவாக ஒரு முகப்பட் டுள்ளன. கைத்தொழில் அலுவல்களும் அரசாங் கத்தால் கட்டி ஆளப்படுகின்றன. மற்றும் சில நாடுகளில், உதாரணமாக, அமெரிக்காவில் கைத் தொழில் வளர்ச்சியில் பெரும் பாகம் தனியார் முயற்சியிலேயே தங்கியுள்ளது. அரசாங்கத்தின் பரந்த சட்டங்கள், தூண்டுதல்கள் போன்றவற்றிற்கு மாத்திரமே அவை உட்படுகின்றன. அபிவிருத்தி குறைந்த நாடுகளில் இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை யை மேற்கொள்கிறார்கள். இந்தியாவை இதற்கு ஒரு நல்ல உதாரணமாக காட்டலாம். அங்கு, அடிப்படையான சில கைத்தொழில்கள் அரசாங்கத் தால் செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மற்றும் சில கைத்தொழில்களை அரசாங்கமும், தனியார் துறையும் சேர்ந்து வளர்க்கின்றன. அன்றாட உப யோகப் பொருள் சம்பந்தமான கைத்தொழில்களைச் செய்வதற்கே தனியார் துறை அனுமதிக்கப்படுகிறது.

இலங்கையின் பத்து வருடத் திட்டத்தின் கீழும் சில மூலக் கைத்தொழில்களை அரசாங்கமே மேற் கொள்ளும். மற்றும் சில கைத்தொழில்களை அர சாங்கமும் தனியார் துறையும் கூட்டாகச் சேர்ந்து நிறுவும். எஞ்சிய தொழில்கள் யாவும் தனியார் துறை மேற்கொள்வதற்கு விடப்படும்.

கைத்தொழில் விருத்தியை தடைப்படுத்தும் குறித்த சில பொருளாதார பிரச்சினைகளைக் கவனிப் போம் :—

போதிய மூலதனம் இல்லாதமை, கைத்தொழில் விருத்தியை மட்டுப்படுத்தும் அம்சங்களுள் முக்கிய மானது. வெளிநாட்டு உதவி, உள்நாட்டுச் சேமிப்பு, வெளிநாட்டின் முதலீடு செய்ய அனுமதித்தல் முதலியவற்றினால் மூலதனத் தட்டுப்பாட்டைப் போக்க லாம். மூலப் பொருட்களையும் மூலதனத்தையும் ஒன்று சேர்ப்பதனால் மாத்திரம் கைத்தொழில் விருத்தி உண்டாகிவிடாது. செயலமைப்பு, திட்ட மிடுதல், ஒன்றிணைத்தல், தொழிற்சாலை வேலையை மேற்பார்வை செய்தல் போன்றவை கைத்தொழில் விருத்தியின்போது உண்மையில் செய்யப்பட வேண் டியவை. பயிற்சிபெற்ற தொழிலாளருக்கு உள்ள தட்டுப்பாடு அபிவிருத்தி குறைவான நாடுகளில் உள்ள இன்னும் ஒரு பிரச்சனை. கைத்தொழிலை மட்டுப்படுத்தும் கடைசி அம்சம் மூலப்பொருட்கள். குறித்த ஒரு மூலப் பொருள் இல்லை என்ற காரணம் மாத்திரம் அபிவிருத்தியை தடைப்படுத்தும் ஒரு அம்சம் ஆகாது. ஏனெனில், அப்படிக் கிடைக்காத மூலப் பொருளை இறக்குமதி செய்யலாம் என்பது தற்போதுள்ள கருத்து.

மட்டுப்படுத்தும் அம்சங்களாக இவற்றை நான் குறிப்பிட்ட போதிலும், இவற்றில் எந்த ஒன்றினாலும் ஒரு நாட்டின் கைத்தொழில் விருத்தி தடைப்பட வேண்டியதில்லை. இந்தக் கஷ்டங்களை நிச்சய கொள்கைகளினாலும், நாடு என்ன செய்ய முயலு கிறது என்பதை உணர்ந்து கொள்வதனாலும் போக்க முடியும்.

கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய அனுபவம் இன்று நிறைய இருப்பதால், குறித்த பிரச்சனைகளைப் பொறுத்த வரையில், பல நாடுகள் இருட்டில் தடுமாற வேண்டியதில்லை. தொழில் நுட்பம் பெரும் அளவில் முன்னேறிவிட்டது. அபிவிருத்தி குறைவான நாடுகள் மேலும் தமது கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவு, வழிகாட்டும் சித்தாந்தங்கள், சாதன அனுபவங்கள், யாவும் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன. வெளிநாடுகளின் உதவியும், சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியும் கூடக் கிடைக்கின்றன. ஆராய்ந்து பார்த்தால், கைத்தொழில் அபிவிருத்திக்கு ஒரு நாடு எவ்வளவு வைராக்கியத்துடன் பாடுபடுகிறது, அதன் தலைவர்கள் எவ்வளவு புத்திசாலித்தனமாக வழிநடத்துகிறார்கள், வருங்கால நலத்துக்காக எவ்வளவிற்கு மக்கள் தமது விருப்பத்துடன் சில மாற்றங்களையும், தியாகங்களையும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பவற்றிலே தான், பொருளாதாரப் பிரச்சனைகளின் தீர்வு தங்கியுள்ளது. வான வெளியை வெற்றி கொள்வதிலும், சந்திரனை அடைவதிலும் சில நாடுகள் எவ்வளவோ முன்னேற்றம் கண்டு வருவதைப் பார்த்தால், எங்கள் நாட்டைப் போன்ற அபிவிருத்தி குறைவான நாடுகள் அவற்றின் பொருளாதார நெருக்கடிகளைக் குறித்த ஒரு காலத்திற்குள் தீர்க்கமுடியும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

பத்து வருடத் திட்டத்தை முறைப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, அரசாங்க ஸ்தாபனங்களும், தேசீய திட்டச் சபையும் ஒன்றுகூடி 3 வருடச் செயலாக்கத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த நோக்கத்திற்காக பல கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. கைத்தொழில் திட்டங்களை வகுக்கும் கமிட்டியும் இவற்றுள் ஒன்று. 1960–61, 1961–62, 1962–63 ஆகிய அடுத்த மூன்று பட்ஜட் வருடங்களுக்கும் உரிய நிகழ்ச்சித் திட்டங்களை கமிட்டிகள் தயாரித்துள்ளன. கமிட்டிகளுக்குப் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களுடன், பின்வருவனவற்றை வரையறுத்தலும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அவை :—

(அ) திட்டங்களும் முதலீட்டுச் செலவுகளும்.

(ஆ) அரசாங்கக் கொள்கைகள்.

(இ) புதிய நிறுவனங்களும் சட்டமும்.

(ஈ) உத்தியோகத்தரைத் திரட்டுதலும் அவர்களுக்குப் பயிற்சி அளித்தலும்.

(உ) நிர்வாகத் தேவைகளும், நிதித் தேவைகளும்.

(ஊ) மேற்கொண்டும் செய்யப்படவேண்டிய ஆராய்ச்சிகள்.

இம்முயற்சிகளின் பயனாக, கைத்தொழில் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினது வேலைத் திட்டங்களுக்கான கால அட்டவணையும் வகுக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சகல இலாக்காக்களும் அவற்றின் திட்டங்களை நிறைவேற்றுகையில் மேற்சொன்ன கால அட்டவணையை அனுசரிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

---

## பொதுநலவமைப்புப் . . . . .

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

வசித்த விடுதி அறையுள்ளும் சென்று பார்த்தார். பிரதமர் சிறீமா மார்ச் 18 ந் தேதி இலங்கை மாணவர் கூட்டத்திலும் பேசினார். அவர், மாணவர்கள் தாம் கற்கவேண்டிய கல்வியைத் திறம்படக் கற்று தாய்நாடு மீண்டு பிறந்த பொன்னாட்டின் மேன்மைக்கு உழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பிரதமருக்கு லண்டனில் ஓயாத வேலை. உல்லாசமாக இருப்பதற்கு நேரமே இருக்கவில்லை. லண்டனில் இருந்த நாட்களில் ஒரேயொரு தடவை நாடகத்துக்குச் சென்றார். ஒரு முறை கடைத்தெருவுக்குச் சில சாமான்கள் வாங்குவதற்குச் சென்றார்.

---

## மறு மலர்ச்சி

இராகம்—காம்போதி தாளம்—ஆதி

பல்லவி

**போற்றி செய்குவோம் புதுயுகம் வேண்டி**
**போக வாழ்வினில் பொய்ம்மை யின்றியே (போ)**

அனுபல்லவி

**வெற்றி கொள்ளுவோம் வித்தை நாடுவோம்**
**விதம் விதமாகப் புதுமைகள் சேர்ப்போம் (போ)**

சரணம்

**இன்பதுன்பம் யாவும் சரிநிக ரென்ற**
**உண்மையை யுணர்ந்து உயர்வெய்து வோம்**
**மன்பதைகள் வாழ மாசில்கீர்த்தி மல்க**
**மறுமலர் வெய்தி மங்களம் பெறுவோம் (போ)**

பார்த்திப வருஷப்பிறப்பிலன்று (13–4–45) கொழும்பு வானொலியில் திரு. செ. சண்முகநாதனால் தயாரிக்கப்பட்டு, நடிக்கப்பட்ட மறுமலர்ச்சி என்னும் ஓற்றையங்க நாடகத்திற்காக “ சிவ ”மும், “ நடராஜ ”னும் சேர்ந்து இயற்றிய கீர்த்தனங்களுள் ஒன்று இது.—[ப-ர்]

# கவி இன்பம்

(வித்துவான் திரு. ஆ. கந்தையா, எம். ஏ.)

கவி இன்பம் என்றும் தெவிட்டுவதில்லை. கவிதைகளில் கலந்து ஈடுபாடு கொள்ளும் பொழுது, நாம் பெறுகின்ற இன்பத்தைச், சொற்களால் தீட்டிவிட முடியாது. நற்கருப்பஞ் சாற்றில் தேனைக்கலந்து, பாலைக்கலந்து, செழுந்தீம் சுவையைக் கலந்து சுவைத்தால் பெறுகின்ற இன்பத்தைக் கவிதைகளில் ஈடுபாடு கொள்ளும் பொழுது நாம் பெறுகின்றோம். நற்கருப்பஞ்சாறும் உவட்டும், பருகப் பருகப் பாலும் கசக்கும், ஏன்? செழுந்தீம் சுவை தானும் தெவிட்டத்தான் செய்யும். ஆனால் கவிதை நல்கும் இன்பம் ஒருபோதும் தெவிட்டுவதில்லை; கவிதைகளில் ஆழ்ந்து சென்றால் அங்கே சொல் அழகைக்காணலாம். பொருட்சிறப்பைப் பார்க்கலாம். கற்பனை வளத்தைக் கண்டு களிக்கலாம். கற்பனை உலகில் வாழும் கவிஞன் தன் உள்ளக் கருத்தைச் சொற்களால் புனைந்து கவிதைவடிவில் தருகின்றான். அவன் கவிதைகளுக்குக் கற்பனை உடலாகவும், உணர்ச்சி உயிராகவும் அமைந்து திகழ்கின்றன. அவை கற்போரின் கருத்திற்கு நல்விருந்தாயும், கற்பனைக்குக் களிப்பாயும், உள்ளத்திற்கு உவப்பாயும் இருக்கக் காணலாம்.

சிறந்த கவிதைகள் சொல் அழகும், பொருட் செறிவும், கற்பனை வளனும் பொதிந்து மிளிரும், சில கவிதைகள் சொற்களால் சிறப்புப் பெற்றுத் திகழும், வேறு சில கவிதைகள் பொருட் செறிவால் அழகுமிக்கு விளங்கும், இன்னும் சில கவிதைகள் கற்பனை வளத்தால் எழில் பெற்று மிளிரும். இவ்வகைச் சிறப்புக்களைக் கம்பன் கவிதைகளில் பரக்கக் காணலாம். கம்பன் கவிதை ஒன்றிலே சொற்சிறப்பையும், பொருட் செறிவையும் கற்பனை வளத்தையும் காணலாம்.

இராம இராவண யுத்தம், இரு பகுதியிலும் ஆயிரக் கணக்கானோர் அழிந்தனர். ஈற்றில் இராமனும் இராவணனும் நேர் நின்று பொருதனர். கூரிய அம்புகளால் அல்லலுற்ற இராவணன் வில்லிழந்தான். வேல் இழந்தான், ஏன்? வாள் கூட இழந்து தன்னந்தனியே போர்க் களத்தில் நிற்கின்றான். படைக்கலம் எதுவும் இன்றி வெறும் கையுடன் நின்ற இராவணனோடு போரிடுவது தன் வீரத்திற்கே இழுக்கு என்று எண்ணுகின்றான் இராமன். எனவே அவனை அணுகி "வலி இழந்து, வாள் இழந்து, வேல் இழந்து நிற்கின்ற வீரனே! இன்று போய் நாளை வா" என்று கூறி அவமானப் படுத்தி அனுப்புகின்றான் இராமன். இராவணன் உள்ளம் குமுற, உடல் துடிதுடிக்க அவமானத்தோடு அரண்மனையை நோக்கித்தன்னந்தனியே செல்கின்றான். அவன் செல்கின்ற துன்பமான காட்சியைக் கற்பனைக் கண்கொண்டு காண்கின்றான் கம்பன். அப்போது கவிதைத் தேன் அவன் வாய் மலரிலிருந்து மெல்ல மெல்லத் துளிர்த்துக் கவிதை வடிவினைப் பெறுகின்றது:—

**"கிடந்த போர் வலியார் மாட்டே**
**கெடாத வானவரை எல்லாம்**
**கடந்து போய் உலகம் மூன்றும்**
**காக்கின்ற காவலாளன்**
**தொடர்ந்து போம் பழியினோடும்**
**தூக்கிய கரங்களோடும்**
**நடந்து போய் நகரம் புக்கான்**
**அருக்கனும் நாகம் சேர்ந்தான்"**

என்பது கம்பன் தீட்டித்தந்த சொல்லோவியம். ஒரு கவிதையிலேயே சொல்லும், பொருளும், கற்பனையும் அமைந்து மிளிரக் காண்கின்றோம். அழகும், சுவையும், வளனும் நிறைந்த கம்பன் கவிதை கருத்திற்கு நல்விருந்தாய் அமைந்து திகழ்கின்ற தன்றோ!

கம்பன் தன் கவிதையின் முதலிரு அடிகளாலும் இராவணனின் வீரத்தையும் தீரத்தையும் அழகாகப் படம் பிடிக்கின்றான். இராவணன் அரசனுக்கு அரசன் என்பதை "காவலாளன்" என்ற சொல்லால் தெளிவு படுத்துகின்றான். இங்கே "அரசன்" என்று கூறாமல் "காவலாளன்" என்று கவிஞன் கூறக் காரணம் என்ன? அரசன் பெயருக்காகவும் இருப்பான். ஆனால் காவலாளனே "நாட்டைக் காக்கிறவன்" என்ற . பொருள்படும். இதனாலேயே "காக்கின்ற காவலாளன்" என்று கம்பன் கவிதையைப் புனைந்துள்ளான். இன்னும் இராவணன் உலகத்திற்கே காவலாளனாக இருக்கின்றான் என்பதைச் சுட்டிக் காட்ட, "உலகம் காக்கின்ற காவலாளன்" என்று எடுத்துரைத்துக் கவிதையை அழகு செய்கின்றான். கம்பன் இவ்வளவுடன் நின்றானா? இல்லை. இன்னும் ஒருபடி மேலே சென்று இராவணனின் வீரத்தைப் புகழ்கின்றான். இராவணன்

மண்ணுலகத்திற்கு மாத்திரமன்று, மூன்று உலகத்திற்கும் காவலாளன் என்பதைத் தெளிவுறுத்த எண்ணிய கம்பன் "மூன்று" என்ற சொல்லை அமைத்து "மூன்று உலகும் காக்கின்ற காவலாளன்" என்று தன் கவிதையை வடித்துள்ளான். எனவே இராவணன் மண்ணுலகிற்கும், விண்ணுலகிற்கும், பாதாள உலகிற்கும் காவலாளனாகத் திகழ்ந்தான் என்பதை அறிகின்றோம்.

இராவணனின் வீரத்தையும் தீரத்தையும் புகழ்வதற்குப் புதிய வழியொன்றைக் காண்கின்றான் புலவன். வானவரைப் புகழுமுகத்தால் இராவணனின் தீரத்தைத் தெளிவாக்குகின்றான் கம்பன். வானவர்கள் வீரத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்கள். அவர்களை எமன்தானும் அணுக முடியாது. இதனைக் "கெடாதவானவர்" என்று கவிதையில் எடுத்துக் காட்டுகின்றான். ஆகவே கெட்டழியவல்ல ஒருவன் கெடாதவானவரை வென்றான் என்றால் அவனின் தீரத்தைச் சொற்களால் எங்ஙனம் தீட்டுவது; வானவர்களின் வீரத்தை மேலும் புகழ்ந்து பேசுகின்றான் கம்பன். நிலையான போரில், வன்மையுடையாரிடத்தே தோற்காத வானவர் என்பதைக் "கிடந்தபோர் வலியார் மாட்டே" என்ற சொற்களால் புனைந்து அழகாகக் காண்பிக்கின்றான். எனவே இராவணன் தேவர்களைப் போரிலே புறங்கண்டான். அதுவும் அவர்களை மிகவும் எளிதாக வென்றான் என்பதை எடுத்துக் காட்ட "கடந்துபோய்" என்ற சொற்களை அமைத்துச் செய்யுளைச் செய்கின்றான். அதாவது தேவர்களையும் அவர்களின் படையையும் மிகவும் எளிதில் வென்றான் என்பதை "கடந்தான்" என்ற சொல் இனிது புலனாக்குகின்றது. இன்னும் தேவர்களில் ஒரு சிலரை மாத்திரமன்று, தேவர்கள் எல்லோரையுமே இராவணன் வெற்றி பெற்றான் என்பதைப் புலப்படுத்த "எல்லாம்" என்ற சொல்லை அமைத்து "வானவரை எல்லாம்" என்று கவிதையைச் செய்யும் கம்பன் கவித்திறத்தை எடுத்துரைப்பது எங்ஙனம்! எனவே இராவணன் வென்றான், அதுவும் வானவரை வென்றான் என்றும், வானவர் எல்லோரையும் வென்றான் என்றும் இராவணனைப் புகழ்ந்து பேசுகின்றான் கம்பன்.

ஆகவே கம்பன் கவிதையை எப்படி அமைக்கின்றான்? காவலாளன் "காக்கின்ற காவலாளன்" உலகம் காக்கின்ற காவலாளன், உலகம் மூன்றும் காக்கின்ற காவலாளன் என்று இராவணனின் வீரத்தையும் தீரத்தையும் புகழ்ந்து கூறுகின்றான். மேலும் அவனின் திறனை, "கடந்துபோய்" வானவரைக் கடந்துபோய், வானவர் எல்லாம் கடந்து போய் உலகம் மூன்றும் காக்கின்றவன் என்று கூறுகின்றான். வானவரைக் கெடாத வானவர், வலியார்மாட்டே கெடாதவானவர், போர் வலியார் மாட்டே கெடாத வானவர், கிடந்தபோர் வலியார் மாட்டே கெடாதவானவர் என்று படிப்படியாக உச்ச நிலைக்குச் சென்று கம்பன் கவிதையைப் புனையக் காண்கிறோம். இதோ அவன் பாடிய முதலிரு அடிகள் :—

**" கிடந்தபோர் வலியார் மாட்டே**
**கெடாத வானவரை எல்லாம்**
**கடந்து போய் உலகம் மூன்றும்**
**காக்கின்ற காவலாளன் "**

என்பது கம்பன் கவிதை.

கவிஞர்கள் தம் கவிதைகளை அழகு செய்யப் பல வழிகளைக் கைக்கொள்கின்றனர். சில கவிஞர்கள் தாம்படைக்கும் பாத்திரமாகவே மாறிவிடுகின்றனர். வேறு சிலர் கற்பனை மாந்தரின் இன்பத்தில் மகிழ்ந்தும், துன்பத்தில் மூழ்கிக் கண்ணீர் வடித்தும் கவிதைகளைப் புனைகின்றனர். இங்கே கம்பன், தான் படைத்த பாத்திரத்தின் வீரத்தையும், புகழையும், புகழ்ந்து பேசுகின்றான். இரு அடிகளால் இராவணனின் இணையற்ற வீரத்தை உச்சிமலைக்கு உயர்த்தி விடுகின்றான். கவிதையில் ஈடுபாடு கொள்வோர் இராவணனைப் புகழ் என்ற உச்சிமலையில், வீரம் என்ற குன்றின் சிகரத்தில் காண்பர். இவ்வாறெல்லாம் இராவணனைப் புகழ்ந்து பேசிய கம்பன், அவனைப் புகழ் என்ற உச்சி மலையிலிருந்து உருட்டிக்கீழே தள்ளி விடுகின்றான். புகழ் ஏணியிலிருந்து இராவணன் புரண்டு வீழ்வதைக் கவிதை அழகாகப் படம் பிடிக்கின்றது. முதலிரு அடிகளால் புகழ்ந்தும், இறுதியிரு அடிகளால் இகழ்ந்தும் கம்பன் கவிதையைப்புனைந்து அழகு செய்கின்றான். இதனால் அவன் கவிதை உயிரும் உணர்வும் உள்ளதாய்த் திகழ்கின்றதன்றோ!

இவ்வாறெல்லாம் இராவணனின் வீரத்தையும் தீரத்தையும் புகழ்ந்து பேசிய கம்பன், அவன் அரண்மனையை நோக்கிச் செல்வதைக் கற்பனையில் காண்கின்றான். இராவணன் நாட்டைக் காக்கும் காவலாளன். பல்லக்கில் பவனிவருவான்; யானைமீது அமர்ந்து புடைசூழ உலாவிவருவான். ஆனால் இன்று? பாவம். நடந்து செல்கின்றான். பல்லக்குமில்லை, பவனி வரும் யானையுமில்லை, வீரருமில்லை, தீரருமில்லை, புடைசூழவரும் சேனையுமில்லை. தன்னந்தனியே அரண்மனையை நோக்கி நடந்தே செல்கின்றான். போரிலே தோல்வியுற்ற அவனைப் பல்லக்

கிலா அனுப்புவான் கம்பன்? அல்லது யானை மீது அமரவைத்து வீரர் சூழ்ந்து வர உலாவி வரவா விடுவான்? அவ்வாறெல்லாம் அனுப்பக் கம்பன் கவிதை உள்ளம் உருப்படவில்லை. அவ்வாறு பல்லக்கிலோ, யானை மேலோ அனுப்பியிருந்தால் உண்மையில் அவன் கவிதை அழகு பெற்றிராது. எனவே இராவணனைப் போர்க்களத்திலிருந்து நடத்தி அனுப்புகின்றான் கவிஞன். அதுவும் "மூன்று உலகத்தையும் காக்கின்ற காவலாளன்" என்று "கிடந்த போர் வலியார் மாட்டே கெடாதவானவரைக் கடந்த வீரன்" என்றும் புகழ்ந்த பின்பு "நடந்து போய் நகரம் புக்கான்" என்று கவிதையைக் கம்பன் புனைவது உண்மையில் கற்போரின் உள்ளத்தையே உறுத்தவல்லதாக அமைந்துள்ளது.

இவ்வளவுடன் கவிஞன் நின்றானா? இல்லை நடந்து செல்கின்ற இராவணனிடம் இரு பெரும் சுமைகளை சுமத்தி அவனை நடக்கவிட்டு அழகு பார்க்கின்றான். பாவம், மூன்று உலத்தையும் காத்த வீரன் இன்று நடந்து செல்கின்றான். அதுவும் இரண்டு பெரும் சுமைகளைச் சுமந்துகொண்டு செல்கின்றான். "தொடர்ந்து போம் பழி" ஒரு சுமை. "தூங்கிய கரங்கள்" இன்னொரு சுமை. இங்கே கம்பன் கவிதை பொருள் பொதிந்து மிளிரக் காண்கின்றோம்.

போர்க் களத்தில் இருந்து திரும்புகின்ற இராவணன் பழியோடு திரும்பினான் என்று மாத்திரம் கூறி நிற்கக் கம்பன் கவிதையுள்ளம் ஒருப்படவில்லை. தொடர்ந்து போம் பழியோடு இராவணன் திரும்பினான் என்று கம்பன் அழகாகத் தீட்டிக் காட்டுகின்றான். வாள் இழந்து, வேல் இழந்து வெறும் கையோடு நின்ற இராவணனை "இன்றுபோய் நாளை வா" என்று கூறி அனுப்பினான், இராமன். இவ்வாறு இராவணன் அடைந்த அவமானத்தை யாருமே மறந்துவிட முடியாது. இராவணன் அடைந்த பழி இவ்வுலகம் உள்ளவரை நின்று நிலவும் என்பதைக் கம்பன் உணர்ந்தான். எனவே தொடர்ந்துபோம் பழியோடு இராவணன் போர்க்களத்திலிருந்து திரும்பினான் என்று கவிதையைப் புனைகின்றான்.

அதன்பின், இராவணனின் இருபது கைகளையும் கற்பனையிலே காண்கின்றான் கம்பன். இராவணன் இருபது கைகளைப் பெற்றிருந்தும் பயன் என்ன? இரண்டு கைகளை உடைய இராமன் அவனைத் தோற்கடித்தான்; அவமானத்திற்கும் ஆளாக்கினான். எனவே கையிருந்தும், அதுவும் இருபது கையிருந்தும் அவைகளால் இராவணனுக்குப் பயன் எதுவும் ஏற்படவில்லை. எனவே அந்த இருபது கைகளும் இராவணனுக்குச் சுமையாக இருப்பது போலக் கம்பன் கற்பனைக் கண்களுக்குத் தெரிந்தது. எனவே "தூக்கிய கரங்களோடு நடந்து போய் நகரம்புக்கான்" என்று கம்பன் கவிதையைப் புனைகின்றான்.

கம்பன், இராவணன் நடந்து நகரம் புக்கதைக் கற்பனையிலே கண்டான். அருக்கனும் அப்போது குடதிசையிலே மறைந்து கொண்டிருந்தான். உடனே தன் கவிதையின் இறுதியடியை, "அருக்கனும் நாகம் சேர்ந்தான்" என்று எடுத்துரைத்து அழகு செய்கின்றான். இவ்வாறு எடுத்துரைப்பதன் மூலம் பல உண்மைகளைக் கவிஞன் மறைமுகமாகத் தெளிய வைக்கின்றான். இராவணனின் துன்பமான நிலையை அருக்கன்தானும் பார்க்கச் சகிக்க முடியாதவனாக மறைந்தான், என்பதைக் கவிஞன் புலப்படுத்தவே அவ்வாறு கூறிப் போந்தான். இன்னும் இதுவரை இராவணன் புகழுடன் விளங்கினான்; அவன் வாழ்வு வெளிச்சமுடையதாக மிளிர்ந்தது. ஆனால் இன்று அவன் வாழ்விலும் இருள்சூழத் தொடங்கியது என்பதைக் காட்ட பகலைக் கொடுத்த கதிரவனும் மறைந்தான் என்று எடுத்துக் கூறி இரவு வந்தது என்பதைக் காட்டுகின்றான் கவிஞன். மேலும் இராவணன் சென்ற துன்பமான நிலையை உணர்ந்த கம்பன், அதை இன்னும் அதிகப்படுத்திக் காட்ட ஏற்ற நேரம் எது என்பதைச் சிந்தித்தான். மாலை நேரமே துன்பத்தை அதிகமாக்கும். எனவே அருக்கனும் நாகஞ் சேர்ந்தான் என்று கவிதையை வடித்தான் போலும்.

இவ்வாறு கம்பன் கவிதைச் சொல்லழகும், பொருட் செறிவும், கற்பனை வளனும் பொதிந்து, ஆய்வோர்க்குத் தெவிட்டாத இன்பத்தைப் பயன்ன வல்லதாக இருக்கின்றது.

# புத்தாண்டுத் தீர்மானம்

செல்வி. ச. நித்தியகல்யாணி

புத்தாண்டு பிறந்ததும் புதிய தீர்மானங்களை மக்கள் செய்வது வழக்கம். ஆனால் அவற்றுள் எத்தனை தீர்மானங்களை உண்மையில் நிறைவேற்றுகின்றார்கள்? கழிந்த ஆண்டில் நிறைவேற்றிய தீர்மானங்களைக் கணக்குப் பார்ப்பதற்கும், புத்தாண்டில் புதுத்தீர்மானங்களுக்குக் கணக்குப் போட ஆரம்பிப்பதற்கும் புத்தாண்டு ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. வருடப் பிறப்பு மக்கள் வாழ்க்கையில் ஓர் எல்லைக் கல்லாக நிற்கின்றது. ஒரு வியாபாரி ஒவ்வொரு வருட இறுதியிலும் தான் செய்த வியாபாரம் நட்டமா? லாபமா? என்று கணக்கிட்டு இனி வரும் வருஷத்தில் நல்ல முறையில் வியாபாரம் செய்து லாபம் பெறத் தீர்மானிப்பதுபோல், வாழ்க்கை என்னும் வியாபாரத்திலே கடந்த ஆண்டின் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்ப்பதற்கும் புது வருடத்தை முன்னோக்கிப் பார்ப்பதற்கும் ஒரு நிலைக்களமாய் இருப்பது இப்புத்தாண்டே.

இப் புத்தாண்டை ஒரு கலங்கரை விளக்கத்திற்கும் ஒப்பிடலாம். ஒரு கப்பல் கடலின் பேரலைகளின் கொந்தளிப்பிலும் புயலின் சீற்றத்திலும் அகப்பட்டுத் தத்தளிக்கும் போது ஒரு கலங்கரை விளக்கம் தென்பட்டால் அக் கப்பலிலுள்ளவர்களுக்குப் பயம் தெளிந்து நாம் எப்படியாவது கரையேறலாம் என்ற நம்பிக்கை உண்டாவது போல் வாழ்க்கைப் புயலில் சிக்கிப் பல வகையான கஷ்டங்களை அனுபவிப்பவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக நின்று அவர்களும் வாழ்க்கைப் புயலிலிருந்து கரையேறலாம் என்னும் நம்பிக்கையூட்டுவது இப் புத்தாண்டே.

ஆகையால் நாம் "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி ஒழுக்கமுள்ள வாழ்வை நாடி வாழவேண்டும். எதை இழந்தாலும் திரும்பப் பெற்றுவிடலாம். கல்வியை மறந்தால் மீண்டுங் கற்றுக் கொள்ளலாம். பொருளை இழந்தால் அதை மீண்டும் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் காலத்தை ஒருநாளும் திரும்பப் பெறமுடியாது. ஆகவே நாம் இப் புத்தாண்டை நல்ல முறையில் உபயோகிக்க வேண்டும். இப்புத்தாண்டு ஒரு தங்கச் சுரங்கம் போன்றது. அத் தங்கச் சுரங்கத்துள் கிடைக்கும் ஒவ்வொரு தூளையும் தங்கமாகப் பாவிப்பது போல் இப் புத்தாண்டின் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு நிமிடத்தையும் தங்கத் தூளாகப் பாவிக்க வேண்டும். சிலர், "ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒரு முறை வருடம் பிறக்கின்றது. 1961 ஆம் ஆண்டு மட்டும் பெரிதோ" என்று அலுத்துக் கொள்வார்கள். யாருக்காயினும், அவன் ஏழையாய் இருந்தாலும் சரி, பணக்காரனாயிருந்தாலும் சரி, ஒரு புதிய பொருளையோ அல்லது புதியது என்று சொல்லி ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்தால் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவது இயல்புதானே. அவனிடம் அதிலும் பார்க்க விலையுயர்ந்த பொருள் இருந்தாலும் அவன் அதை விரும்புவது இயல்பு. அதைப் போலவே புத்தாண்டு புதிதாக உதிக்கும் போது நமக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாவது இயல்பே. ஒரு குழந்தை புதிய ஆடைகளையும், விளையாட்டுப் பொருள்களையும் பயனை எதிர்நோக்காமல் அவை புதிது என்பதற்காக விளையாடுவது போல் யாமும் இதே மனத்துடன் புத்தாண்டை வரவேற்று உபசரிக்கவேண்டும்.

நாளைய சந்ததியார் தம் வாழ்க்கையை அறநெறியில் நடத்தத் திட்டமிட வேண்டும். அறம் என்பதற்கு மனத்திலே மாசில்லாத சிந்தனையுடன் வாழ்வது எனச் சொல்லலாம். அதாவது பிறருயர்ச்சி கண்டு பொறாமையும், ஐம்புல ஆசையும், அவை காரணமாகப் பிறர் மேல் உண்டாகின்ற கோபமும், அது பற்றி வருகின்ற கடுஞ் சொல்லும் ஆகிய நான்கினையும் தவிர்த்து நடப்பதாகும். இத்தகைய வாழ்வு சீராவதற்குச் சமயம் பெரிதும் உதவி புரிகின்றது. ஆகவே நாளைய சந்ததியாராகிய நாம் புத்தாண்டில் சமயத்தினை அடிப்படையாகக் கொண்டு அறநெறியைக் கடைப்பிடித்து சுயநலத்தைக் குறைத்து பொதுநலத்தைப் பெருக்கி வையத்துள் வாழ்வாங்குவாழ மாசற்ற வாழ்வு நடத்தத் தீர்மானம் செய்து அதனை இயன்றவரை நிறைவேற்ற முயல்வோமாக.

வணக்கம்!

# ஆடும் பெருமான்



**கலையாராய்ச்சி வல்லுநர் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான், பீ. ஏ. அவர்கள்**

சென்னை விக்டோரியா மண்டபத்தில், சில வருஷங்களுக்கு முன்னால், ஒரு நாள் மாலை ஏகக் கூட்டம். தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்ற நாட்டியக்காரியின் பரத நாட்டியத்தைப் பார்ப்பதற்காக அக்கூட்டம் கூடியிருந்தது. மேடைமீது திரைவிடப்பட்டிருந்தது. நாட்டியக் கச்சேரியைப் பார்க்க வந்த பிரமுகர் கூட்டம் முன் வரிசையில் நிரம்பியிருந்தது. அந்த வரிசையிலே, அகில இந்தியப் புகழ் பெற்ற நடிகர் ஒருவரும் வீற்றிருந்தார். மேடைமீது நின்ற திரை விலகியதும், நாட்டியக்காரியும், பின் பாட்டு, பக்க வாத்தியக்காரர்களும் தோன்றினார்கள். பரத நாட்டியக் கச்சேரி முறைப்படி, அலாரிப்பு, ஜதிஸ்வரம், வர்ணம், தில்லானா எல்லாம் நடந்தன. பிறகு, அபிநயம் ஆரம்பமாயிற்று.

“ வேலவரே ! உமைத் தேடி ஒருமடந்தை
விடிய முழுதும் காத்திருக்கின்ற வகையென்ன?
(வேலவரே)
வாலிபமும், சேல்விழியும், வில்லுப்புருவம்
வடித்து வாள்நுதலும் மதிவதனமும்
மேலும் அவள் மேனி பசும் பொன்னிறமும்
மின்னல் கொடியோ, அன்ன நடையோ ஒய்ய
லாக ”

என்று பைரவி ராகத்தில் பாடிக்கொண்டே அபிநயம் பிடித்தாள் நாட்டியக்காரி. பாட்டில் வரும் பெண்ணின் அழகையெல்லாம் கேட்டவர்கள் அனுபவிக்கும்படி செய்து விட்டாள். மின்னல் கொடியின் துள்ளலையும் துவழ்தலையும் அப்படியே காட்டி விட்டாள். அன்ன நடையோ என்று சொல்லும் போது அன்னத்தைப் போலவே ஒரு குறு நடை நடந்து காட்டினாள். இதைப் பார்த்தார் அகில இந்திய நடிகர். அப்படியே பிரமித்துப் போய் விட்டார். அன்று நாட்டியக் கச்சேரி முடிந்ததும் தம் ஜாகைக்குப் போனார். மாடியின் கதவைச் சாத்திக்கொண்டார். நிலைக் கண்ணாடியின் முன்பு போய் நின்று கொண்டார். அன்ன நடையை நடந்து நடந்து பார்த்தார். அவருக்கு, அவர் நடித்த நடையெல்லாம் தாராக்கோழியின் ‘தத்தக்கா புத்தக்கா’ நடையாக இருந்ததே யொழிய அன்ன நடையாகக் காணப்படவில்லை. பல முறை முயன்றார். பலனைக் காணோம். கடைசியாகச் சோர்ந்து படுக்கையில் சாய்ந்தார். படுக்கையில் படுத்துக் கொண்டே தமது தோல்வியை நினைந்து நினைந்து வருத்தப்பட்டபொழுதுதான் அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. அன்ன நடை நடப்பது பெண்களுக்கே சாத்தியம், ஆண்களுக்கு சாத்தியமல்ல என்று கண்டார். நடனக் கலையில் பெண்ணுலகத்தின் வெற்றியை மனதார ஒப்புக்கொண்டார். தாம்

பெண்ணாகப் பிறக்கவில்லையே என்று நொந்து கொண்டார். "ஆடவர் பெண்மையை அவாவிய" நிலையை நாம் அவரிடம் கண்டோம்.


ஆனால் நினைவுகளுக்கெல்லாம் எட்டாத பிரதான காலத்திலே நடிப்புக்கலையில் பெண்மையை ஆண்மையல்லவா வென்றிருக்கிறது? அந்தக் கதையைத்தான் நான் இப்போது சொல்லப்போகிறேன்.

ஒருநாள் சிவபிரானைத் தரிசித்து விட்டு வர, விஷ்ணு கைலாசத்திற்குச் சென்றார். இவர் அங்கே போன சமயத்தில் சிவபிரான் தாருகா வனத்து ரிஷிகளின் கர்வத்தை யடக்குவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். விஷ்ணுவையும் தம்முடன் வரும்படி கூப்பிட்டார் சிவபிரான். இருவரும் முறையே, ரிஷியாகவும் மோகினியாகவும் வடிவந் தரித்துத் தாருகா வனத்தை அடைந்தார்கள். ரிஷி வேடந் தாங்கிய சிவனது வடிவழகில் மயங்கி நிறையழிந்தனர் ரிஷி பத்தினிகள். மோகினியின் பேரில் மோக வெறி கொண்டனர் தாருகா வன ரிஷிகள். இந்த நிலையில் தங்களது தவத்தைக் கலைக்க வந்த அவ்விருவரையும் தொலைத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டு ஆபிசார ஹோமம் செய்ய ஆரம்பித்தார்கள். ஹோம குண்டத்திலிருந்து எழுந்தது புலியும் பாம்பும். புலியை உரித்து அதன் தோலை அரையில் உடுத்திக் கொண்டார் சிவபிரான். பாம்பையும் அப்படியே சடையிலும் கழுத்திலும் ஆபரணமாகச் சூடிக் கொண்டார். கோபமும் இன்பமும் மாறி மாறி வர, சிவபிரான் தமது நடனத்தை ஆரம்பித்து அற்புதக் கூத்தாடினார். கடைசியாக ஹோம குண்டத்திலிருந்து எழுந்ததையா, முயலகன் என்ற பெரும் பூதம்! அந்த பூத புருஷனையும் தம்கால்கள் ஒன்றினால் அமுக்கி வைத்துக்கொண்டே தமது அற்புத நடனத்தை ஆடி முடித்தார். தேவர்கள் எல்லாம் இத் திருக் கூத்தைக் கண்டு மகிழ்ந்தனர். தாருகா வனத்து ரிஷிகளும் தங்களது அறியாமைக்காக வருந்தி, சிவபிரானது பெருமையை ஒப்புக்கொண்டு அவனது பக்தர்கள் ஆனார்கள்.

இது நடந்து கொஞ்சக் காலமாக தேவலோகத்தில் எங்கு பார்த்தாலும், இந்த நடராஜனது நடனத்தைப்பற்றியே தான் பேச்சு. "என்ன ஆட்டம்" "என்ன ஆனந்தம்!!" என்றே தேவர்கள் எல்லாரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். ஒரு நாள் விஷ்ணு தம் மனைவி லக்ஷ்மியிடம் பிரமாதமாக இந்த நடனத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். இதை யெல்லாம் கேட்டார், ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன். உடனே எழுந்திருந்து சிவபிரானிடம் ஓடினார். அவர் ஆடிய அற்புதக் கூத்தைத் தாம் காண ஆடிக் காட்ட வேண்டுமென்று மன்றாடினார். பக்தனது வேண்டுகோளுக்கிணங்கி, **"நீ போய்த் தில்லையில் வியாக்கிரபாதனுடன் இரு. நாம் அங்கு வந்து நம் நடனத்தைக் காட்டுவோம்"** என்றார் சிவபிரான். உடனே ஆதிசேடனும் விரைந்தோடித் தில்லைக்கு வந்தார். பாதி மனித உடலும், பாதி பாம்புடலுமாகப் பதஞ்சலி என நாமம் தாங்கி, ஆனந்தக் கூத்தனின் அற்புத நடனத்தைக் காணத் தவங்கிடந்தார்.

கடைசியாக நிருத்த சபைக்கு வந்து சேர்ந்தார் சிவபிரான். நிருத்த சபை அப்போது காளி தேவியின் ஆளுகையில் இருந்தது. சிவபிரானைக் கோவிலுக்குள் விட அவள் சம்மதிக்கவில்லை. நாட்டியத்தில் தன்னுடன் ஆடி வெற்றி பெற்றால் மட்டுமே கோவிலுள் இடம் உண்டு என்று சொல்லி விட்டாள். ஆகவே காளிக்கும் சிவனுக்கும் நாட்டி

கொழும்பு நூதனசாலையிலுள்ள நடராஜர் திருவுருவம்.



யப் பந்தயம் ஆரம்பமாயிற்று. காளிகா தேவி பெண்ணுய்ப் பிறந்தவள். நாட்டியத்திற்கு ஏற்ற உடலும் தேகக் கட்டும் உடையவள். அவளது நடனத்தை எல்லோரும் ரசித்தார்கள். சிவனது நடனமும், அவள் ஆட்டத்திற்குச் சளைக்கவில்லை. என்றாலும் அவளது ஆட்டத்தை வெல்ல முடியவில்லை. கடைசியாய்ப் பார்த்தார் சிவன். இவளை வெல்வதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு என்று கண்டார். இடது காலை யூன்றிக் கொண்டு வலது காலை அப்படியே தூக்கி விட்டார் தலைக்கு மேலே. பெண்ணுய்ப் பிறந்ததன் சிறுமையை அப்பொழுது தான் உணர்ந்தாள் காளி. சிவன் செய்தது போல் தன்னுல் செய்ய முடியாது என்று நினைத்து நாணி அப்படியே தலை குனிந்து விட்டாள்; பெண்மையை ஆண்மை வென்று விட்டது. வெட்கிய காளி அப்படியே ஓடி வெளிப்புறத்தே தங்கிஞள். அவளது கோயில்தான் இன்று சிதம்பரத்துக்கு வெளியே உள்ள தில்லை மாகாளி கோயில். அன்று முதல் நிருத்த சபை, ஆடவர் திலகமான சிவபெருமானின் கைவசமாயிற்று என்று கூறும் கோயில் புராணமும் கர்ணபரம் பரையும். எப்படி இருக்கிறது கதை ?

இந்த ஆனந்தத் தாண்டவம், அற்புதக் கூத்து, ஊர்த்துவ நடனம் எல்லாம், சாஸ்திர விற்பன்னர்கள், கவிஞர்கள், சிற்பிகள், பக்தர்கள் இவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள ஆரம்பித்தன. எல்லாம் வல்ல இறைவனுகிய சிவபெருமான் ஆட, பிரபஞ்சமே ஆடுகின்றது என்று தத்துவ தரிசனம் கண்ட பெரியார் கூறுகிருர்கள்.

**வேதங்க ளாடமிகு ஆகம மாடக்**
**கீதங்க ளாடக் கிளர்அண்டம் ஏழாடப்**
**பூதங்க ளாடப் புவனம் முழுதாட**
**நாதங்கொண் டாடினுன் ஞானனந்தக் கூத்தே**

என்றுர் திருமூலர். ஆனந்தமான அரங்கத்திலே ஆனந்த மயமான கீதவாத்திய கோஷங்களோடு அகில லோகமும் ஆனந்தம் அடையும்படியாக இறைவன் ஆனந்த நடனம் ஆடுகின்றுன்; ஆனந்தக் கூத்தனின் ஆனந்த நாடகமே பிரபஞ்ச நாடகமாகின்றது; ஆனந்தக் கூத்தால் உலகமே ஆனந்தமடைகின்றது என்பது தத்துவ ஞானிகள் கொள்கை.

இந்தத் தத்துவ மெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். இந்த ஆனந்தத் தாண்டவம் கவிஞன் உள்ளத்தை எவ்வாறு கொள்ளைகொண்டிருக்கிறது என்று பார்ப்போம். காலை நேரம். கீழ்த்திசையிலே இன்னும் கதிரவன் தோன்றவில்லை. அவனது வரவை



சென்னை நூதனசாலையிலுள்ள நடராஜ விக்கிரகம்.

நோக்கி வேத கோஷம் எழுகின்றது. கின்னரர்கள் இன்னிசை பாடுகின்றுர்கள். தேவர்களும் முனிவர்களும் கைகளைக் குவித்து வணங்குகின்றுர்கள். நீலக் கடலாகிய மத்தளம் அதிர்கின்றது. **“தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனுக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ ?”** என, பொற்கதிர் விரித்து பால சூரியன் கீழ்த் திசையாகிய வானரங்கத்திலே தோன்றுகின்றுன். சூரிய வட்டம், கடல் அலைகளிலே மிதந்து வருவது நடம்புரிவது போலவேயிருக்கிறது. இதையெல்லாம் தூரத்தே இருந்து பார்க்கிருர் கவிச் சக்கரவர்த்தி கம்பர். மறைகளோடு கின்னரர் இசைபாட, விண்ணும் மண்ணும் கைகுவித்து ஏத்த, சிதாகாசத்திலே ஆனந்த நிர்த்தமிடும் நடராஜ மூர்த்தியே, கீழ் வானமாகிய அரங்கத்தில் இன்ப ஒளித் திரளான இளஞ் சூரியனுய் உதயஞ் செய்துவிட்டான் என்று நினைக்கின்றுர். இந்த எண்ணமெல்லாம் அவர் உள்ளத்தைப் பீறிக்கொண்டு கவிதா ரூபத்தில் வெளியே வருகின்றது.

எண்ணரிய மறையினெடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த

விண்ணவரும், முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப, வேலையென்னும்

மண்ணுமணி முழவதிர, வானரங்கில்
நடம்புரிவான் இரவியான

கண்ணுதல் வானவன் கனகச் சடைவிரித்தால்
எனவிரித்த கதிர்களெல்லாம் !

என்பது என்ன அழகான ஜீவ சித்திரம்! சூரிய உதயத்தை இதைவிட அழகாக யாரால்தான் வர்ணிக்க முடியும்? கம்பராலேயே முடியுமா என்பது சந்தேகம்தான். நடன ராஜனது ஆனந்தக்கூத்து கவிஞன் உள்ளத்தை அப்படியே வசீகரித்து அந்த வசீகர மெல்லாம் உணர்ச்சி வேகத்துடன் பொங்கி வருவதைக் காட்டுவதல்லவா இந்தப் பாட்டு?

தத்துவ ஞானிகளும் கவிஞர்களும் ஒருபுற மிருக்க, சிற்பக் கலை நுணுக்கம் தெரிந்த பெரியார் பலர் இந்த அழியா அழகுடைய ஆனந்தக் கூத்தைக் கல்லிலும் செம்பிலும் பொறித்து வைக்க ஆரம்பித்தார்கள். கோயில்கள்தோறும் நடராஜரது சிலைகள் எழுந்தன. ஆனந்தத் தாண்டவம், ஊர்த்துவ நடனமெல்லாம் உயிர் பெற்றன. பக்கத்திலே காட்டி யிருக்கும் சித்திரங்களில் அந்த உயிரோவியங்களை நீங்கள் பார்க்கலாம். ஏதோ! பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் மட்டும் இக் காட்சிகளைக் காணும் பாக்கியம் கிட்டிவிட்டது என வருந்தவேண்டாம். கலை யுணர்ச்சியுள்ள கண் கொண்டு காணும் யாவரும் இந்த அற்புத நடனத் திருக்கோலத்தைக் கண்டு மகிழலாம். கல்லிலும் செம்பிலும் கண்ணுதலைக் காட்டிய பெரியவர்களுக்கு நாம் எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம் என்று சொல்ல வேண்டுமா?

இத்தகைய நடராஜனது திருவுருவங்களைக் கண்டு கண்டு இன்பம் பெரிதும் அனுபவித்தவர் **அப்பர்** என்று சொன்னால் மிகையாது. "இந்த ஆனந்த நடனத்தைப் பார்க்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும்" என்ற உறுதி மட்டும் இருந்தால் எவ்வளவோ துன்பம் நிறைந்த இம்மனிதப் பிறவி இன்னும் எத்தனை தரம் வேண்டுமானாலும் எடுக்கலாம் என்று முடிவு கட்டிவிடுகிறார்.

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்


பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்

இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்

மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே.

அப்பர் பாட்டிற்கு ஒரே யொரு திருத்தம். மனிதப் பிறவி மட்டும் போதுமா? பனியுறையும் நியூஜிலாந்திலும் கிரீன்லாந்திலும் மனிதனாய்ப் பிறந்து என்ன பயன்? **ஆனந்தக் கூத்தனின் அழகிய நடனத்தையும், அந்த நடனச் சிறப்பைக் கண்டு போற்றும் அப்பர் கவியையும் அனுபவிக்கத் தமிழனாகவும் பிறக்க வேண்டாமா?**

ஒரு நாள் நானும் என் நணபர் ஒருவரும் பசுவந்தனை என்ற ஊரில் உள்ள கைலாசநாதர் கோவிலுக்குச் சென்றோம். அந்தக் கோவில் உள்ளே சுவாமி தரிசனத்திற்காகச் சென்ற இருவரும், எழுந்திருந்து பூசை செய்வதற்காக அமைத்து வைத்திருக்கும் நடராஜனது செப்பு விக்கிரகத்தின் முன்னிலையில் சில நிமிஷ நேரம் நின்று தொழுதோம். வெளியே வந்தவுடன் என் நண்பரைப் பார்த்து நான், "நண்பரே! அந்தச் சிலையில் காணும் சிற்பியின் கைத்திறனையும் நுணுக்க வேலைப்பாட்டையும் பார்த்தீரா?" என்று கேட்டேன். அதற்கு அவர், **நான் சிலையையும் பார்க்கவில்லை, அதன் வேலைத் திறனையும் பார்க்கவில்லை. இறைவன் சன்னிதானத்தின் முன் நின்ற உணர்ச்சியை யல்லவா பெற்றேன்?"** என்றார். இதைக் கேட்டவுடனே **"கடவுளைக் காண்பதற்குரிய சுருக்கமான வழி கலைதான்"** என்று கவி **ரவீந்திரநாத டாகூர்** சொன்ன வாக்கியத்தின் உண்மையை அறிந்தேன். **சாஸ்திரம், சமயம், கலை எல்லாம் ஒன்று கூடும் இடம் நடராஜரது திருவுருவம் என்பதும், அத்தகைய சிறந்த தத்துவம் ஒன்றை உலகுக்குக் கொடுத்தது தமிழ்நாடு என்பதும், தமிழராகிய நமக்கு எவ்வளவு பெருமை கொடுக்கிறது.**



பொலநறுவையில் கடந்த ஒக்ரோபர் மாதம் கண்டெடுக்கப்பெற்ற மிகப் பெரிய பிள்ளையார் திருவுருவம்.

# பொலநறுவைப் பிள்ளையார்

(குலசபாநாதன்)

புத்தாண்டினை இலங்கையிலுள்ள பௌத்தர்களும் இந்துக்களும் புனித நாளாகக் கருதிக் கருமம் ஆற்றுகின்றனர். அத்தினத்தில் வீடுவாசல், வியாபாரத்தலம், பாடசாலை, கைத்தொழிற்சாலை, கோயில் முதலிய யாவும் சுத்தமாக இருக்கவேண்டும். இயன்றவரை அலங்காரஞ் செய்வது நல்லது. கூடுமானவர்கள் புத்தாடை அணியலாம். ஏனையோர் தோய்த்துலர்ந்த ஆடை தரிக்கலாம். ஏழை எளியவர்களுக்கும் நோயாளருக்கும் புத்தாடை உணவு முதலியன கொடுத்துதவ வேண்டும். முதலாளிமார் தொழிலாளர்களுக்கு வெகுமதி கொடுக்க வேண்டும். அந்நாள் காலை முதல் மாலைவரை தூய சிந்தையுடன் இன்பமாகக் கழிக்க முயல்வார்களானால் அவர்களுக்கு அவ்வாண்டு முழுவதும் இன்பமாகவே நிறைவேறும் என்பது கருத்து. புத்தாண்டிற்றான் விநாயகரை முதலில் வணங்க வேண்டும்.

**திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்**
**ஆதலால் வானோடு மானை முகத்தோனைக்**
**காதலாற் கைகூப்புவர் தங்கை.**

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

என ஆன்றோர் அறிவுரை புகட்டியுள்ளமை இதனை வலியுறுத்தும். பிரணவப் பொருளாகிய விநாயகக் கடவுளது திருப்பாதாரவிந்தங்களைச் சிர

மேற்கொண்டு, புத்தாண்டினைத் தொடங்குவோர்க்கு விக்கினங்கள் வாரா. கஜமுகாசுரனைச் சங்கரித்துத் தேவர் துயர் தீர்த்த செல்வன் விநாயகர். தாய் தந்தையரை வழிபடுவதே சிறந்த வழிபாடெனத் தன் தம்பி முருகனுக்குப் புத்திபுகட்டிய நுண் மதியாளன் விநாயகர்.

பிள்ளையார் வழிபாடு சங்க இலக்கியங்களிற் காணப் பெருமையால் அது பிற்காலத்தில் ஏற்பட்ட தென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் காலத்தில், அவருடைய சேனாதிபதியாக விருந்த பரஞ்சோதியார் சளுக்கிய மன்னனின் தலைநகரான வாதாபிமீது படையெடுத்து வெற்றி கண்டு திரும்பும்போது வெற்றிக்கறி குறியாகப் படைவீரர்கள் பல்வேறு பொருட்களை எடுத்து வந்தபொழுது, பரஞ்சோதியார் வாதாபிக் கோட்டையில் வீற்றிருந்த பிள்ளையாரைப், பெயர்த்தெடுத்து வந்து தமது ஊராகிய திருச்செங்காட்டவ குடியிலே பிரதிட்டை செய்து வைத்தார். வாதாபி கணபதி தமிழ் நாட்டிலே குடி கொண்டவரலாறு இது. எனினும் பிள்ளையார் வழிபாடு மிக விரைவில் கிராமங்களிலும் சேரிகளிலும் மரங்களின் கீழும் பரவத் தொடங்கியது.

இலங்கையில் இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் கணேசரை வழிபடுவதுண்டு. ஈழநாட்டிலே அநேக பிள்ளையார் கோயில்கள் உண்டு. சைவசமயம் இலங்கையில் மன்னர் ஆதரவைப் பெற்ற காலம் சோழர் ஆட்சிக் காலமாகும். பொலநறுவை (புலைநரி அல்லது புலஸ்திநகரம்)யில் அநேக சைவாலயங்கள் சோழராலும் பாண்டியராலும் கட்டப் பெற்றன. அவர்கள் ஆட்சி முடிந்ததும் அங்குள்ள விக்கிரகங்களைப் பூசகர்களும் பொது மக்களும் மண் தோண்டிப் புதைத்து வைத்தனர். 1912 ம் ஆண்டளவில் அநேக திருவுருவங்கள் வெளிக் கிளம்பின. அவை இப்பொழுது கொழும்பு நூதன சாலையில் இருக்கின்றன. கடந்த ஒக்ரோபர் மாதம் இவற்றிலும் பெரிய விக்கிரகங்கள் வெளிக்கிளம்பின. இலங்கையிலே இதுவரை கண்டெடுக்கப் பெற்ற பிள்ளையார் விக்கிரகங்களுள் (உற்சவமூர்த்தி) அண்மையில் கண்டெடுக்கப்பட்டதுதான் மிக மிகப் பெரியது. இது அநுராதபுர தொல் பொருட் பகுதி நூதனசாலையில் வைக்கப்படும். இதன் படத்தை ஈண்டுப் பிரசுரிக்கிறோம். பொலநறுவைப் பிள்ளையார் திருவுருவம் அளவாலும் நுண் தொழில் வேலைப்பாட்டினாலும் தலை சிறந்த விக்கிரகமாக விளங்குகின்றது. இவ்வளவு பிரமாண்டமான பிள்ளையார் திருவுருவங்களை அரசர்கள் மாத்திரமே தம் சிற்பிகளைக் கொண்டு பெருஞ் செலவில் அமைத்திருக்க முடியும்.

**ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்**
**நால்வாயைங் கரத்தன் ஆறு**
**தருகோட்டம் பிறைஇதழ்த் தாழ்சடையான்**
**தருமொருவா ரணத்தின், தாள்கள்**
**உருகோட்டன், பொடும்வணங்கி ஓவாதே**
**இரவு பகல் உணர்வோர் சிந்தைத்**
**திருகோட்டும் அயன்திருமால் செல்வமும ஒன்றோ**
**வென்னச் செய்யும் தேவே**

—சிவஞானசித்தியார்

---

## கௌரவ பிரதம மந்திரி . . . .


(8 ம் பக்கத் தொடர்ச்சி)

எமது தேசீயப் புத்தாண்டுத் தினமாகிய இப் புனித நாளில் இவ்வபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றேன். தேசப்பற்றும் தாய் நாட்டில் அன்பும் கொண்ட உண்மை இலங்கையர் அனைவரும் இப்பணியில் எமக்கு உதவத் தங்கள் முழு ஆதரவையும் உண்மையான உழைப்புடன் தங்கள் நேரம், பொருள், தொழில் நுட்ப நிர்வாகத்திறமை ஆகியவற்றை அளிக்க வேண்டுகின்றேன். அலுவலகம், தொழிற்சாலை, காணி, தேயிலை அல்லது ரப்பர்த் தோட்டம், அடிப்படை உணவுப் பொருட்கள் விளையும் வீட்டுத்தோட்டம்—எங்காயினுஞ்சரி, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் தத்தம் கடமையைச் செய்வாராக.

நம்பிக்கைகளிலும் விருப்பங்களிலுமே மற்றோராண்டை வீணுகக் கழித்தோம் என்று எம்மைப்பற்றிச் சொல்லப்படாமல், அப்படியான ஆக்கப்பணியாகிய நாட்டு அபிவிருத்திக்கு உழைப்பதில் கவனஞ் செலுத்துவோமாக. சமாதானம், செழுமை ஆகியவை நிலவுங் காலத்துக்கு முன்னேற வேண்டுமாயின் நாம் உழைக்க வேண்டும். மேலும் உழைக்க வேண்டும். இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும். அதுவே எமக்குத் தேவை.

கொண்டாட்டங்கள் நிறைந்த இச்சந்தர்ப்பத்தில் எம்முன் உள்ள பொருளாதார அபிவிருத்தி என்னும் இந்த அவசரமான பணியில் உங்கள் ஒத்துழைப்பை மீண்டும் வேண்டுகின்றேன். இதன் மூலம் எதிர்காலத்தில் இந்நாட்டின் பொது மக்கள்—சாதாரண மக்கள்—சௌகரியங்களுடனும் சுயமரியாதையுடனும் மதிப்புடனும் வாழமுடியும்.

மும்மணிகளின் ஆசிகள் உங்களை எப்போதும் பாதுகாக்குமாக.



மின்னேரியாவில் நிறுவப்பட்டுள்ள மரமரியும் ஆலே.

# மரமறுக்கும் மூன்று ஆலேகள்

முதிரை மரங்களேப் பாதுகாப்பதற்கு காலாகாலத்தில் நடவடிக்கை

**ஐக்கிய ராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர சாதனங்களேக் கொண்டு எம்பிலிப் பிட்டி, மின்னேரி, மதவாச்சி ஆகிய இடங்களில் அதிக சக்தி வாய்ந்த மூன்று பெரிய மரமறுக்கும் ஆலேகளே அரசாங்கம் நிறுவியுள்ளது. இவ்வாலேகள் ஒவ்வொன்றுக்கும் $3\frac{1}{2}$ லட்ச ரூபாவுக்குமேல் அரசாங்கத்துக்குச் செலவாகியிருக்கிறது.**

காடழித்து காணிதிருத்தும் வேலேகளில் வெட்டி வீழ்த்தப்பட வேண்டியிருக்கும் மரங்களிலிருந்து ஆகக் கூடிய பிரயோசனத்தைப் பெறத்தக்க தாக, பெருமளவில் நீர்ப்பாசன குடியேற்ற வேலேகள் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் இந்த மரமறுக்கும் ஆலேகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மரமறுக்கும் ஆலேகளே தாபித்ததன் மூலம், இதுவரை தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்

களின் ஏகபோக உரிமையாக இருந்துவந்த துறையில் வன பரிபாலனப் பகுதி பிரவேசித்துள்ளது. தற்சமயம் 16 சிறிய மரமறுக்கும் ஆலைகள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களால்கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றன. இவர்கள் தங்களுக்குத் தேவையான மரங்களை வனபரிபாலனப் பகுதியிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். பூசாவிலுள்ள சிறிய மரமறுக்கும் ஆலைமட்டும் கூட்டுறவு அடிப்படையில் நடைபெற்று வருகின்றது.

காணி அபிவிருத்திப் பகுதியிடமும் சில மரமறுக்கும் ஆலைகள் இருக்கின்றன. இவை காணி திருத்தப்பட்டுவரும் பிரதேசங்களிலுள்ள நீர்ப்பாசனப் பகுதி, காணி அபிவிருத்திப் பகுதி போன்ற அரசாங்கப் பகுதிகளின் சுய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

ஆனால், எம்பிலிப்பிட்டி, மின்னேரி, மதவாச்சி ஆகிய இடங்களில் தொழிற்சாலைகளின் அளவில் நிறுவப்பட்டுள்ள பிரமாண்டமான மரமறுக்கும் ஆலைகள் ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 600 கன அடி முதல் 700 கன அடி வரையில் அறுக்கப்பட்ட மரத்தை வழங்கக் கூடிய சக்தியுள்ளவைகளாக விளங்குகின்றன. துரிதமாக காணி திருத்தப்பட்டு வரும் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள இந்த மரமறுக்கும் ஆலைகள் காடழிக்கப்பட்டுவரும் பிரதேசங்களில் வெட்டி வீழ்த்தப்படும் எல்லா மரங்களையும் அறுத்து வழங்கக் கூடிய சக்தியுடையன. முன்னர் இம்மரங்களில் அதிகமானவை சுட்டெரிக்கப்பட்டன அல்லது புதிய குளங்களில் தாழ்த்து விடப்பட்டன. வீடமைப்பு வேலைகள் மலிவான முறையில் நடைபெறக் கூடியதாக உண்மையான உபயோகிப்பாளருக்கு பெருந்தொகையான அறுக்கப்பட்ட மரம் குறைந்த விலைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்வதே, அரசாங்கம் மரமறுக்கும் ஆலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று, விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. ஸி. பீ. டி சில்வா அவர்கள் கூறிய இந்த யோசனையின் முக்கிய நோக்கமாகும். இந்நடவடிக்கை கடந்த சிம்மாசனப் பிரசங்கத்தில் குறைந்த விலைக்குக் கட்டிடப் பொருட்களை வழங்குவதுபற்றி பிரகடனப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைக்கு இணக்கமானதாகும்.


**பிரசாரம்**

கட்டிட, தட்டுமுட்டுச் சாமான், கைத்தொழில்களில் இதுவரை உபயோகிக்கப்படாத மரங்களை பிரபல்யப்படுத்துதற்கு ஓர் இயக்கத்தை ஆரம்பிக்குமாறும் அமைச்சர், வனபரிபாலனப் பகுதிக்கு உத்தரவு பிறப்பித்தார். மேலும் இலங்கை பூராவும் விற்பனை நிலையங்களை தாபிப்பது மூலம் இம்மரங்கள் பெருந்தொகைகளில் கிடைக்கக் கூடியதாகச் செய்ய வேண்டுமென்றும் அவர் உத்தரவிட்டார். இக்கருத்தை நோக்கிற் கொண்டு, இலங்கை மரங்களைப்பற்றி விசேஷமாக கட்டிடத் தொழிலும் தட்டுமுட்டுச் சாமான் தொழிலும் இதுவரை உபயோகிக்கப்படாத மரங்களைப்பற்றி ஒரு கைநூலை வனபரிபாலனப் பகுதி இப்பொழுது தயாரித்து வருகிறது.

இதுசம்பந்தமாக, பலதரப்பட்ட மரங்களின் புதிய விலைப்பட்டியல் ஒன்றையும் வனபரிபாலனப் பகுதி தயாரித்துள்ளது. இப்பட்டியல் 1960, டிசம்பர் மாதம் 24 ந் திகதி துவக்கம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த விலைப்பட்டியலைக்கொண்டு சாதாரண கட்டிட மரங்களின் விலைகளை வனபரிபாலனப் பகுதி குறைத்துள்ளது. கட்டிடத் தொழில் சாதாரணமாக உபயோகிக்கப்படும் "மில்லை", "றணை",

(27 ம் பக்கம் பார்க்க)

காணி அமைச்சர் திரு. ஸி. பீ. டி சில்வா அவர்கள் மின்னேரியாவில் மரமரியும் ஆ...யைத் திறந்துவைக்கிறார்.




கல்லில் கடவுள்

# நாக வழிபாடு

(திரு. ம. பொ. செல்வரத்தினம், அவர்கள்)

மிகப் புராதன காலந் தொட்டு நாகவழிபாடு இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்ட தென்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. சூரிய, சந்திர, பிரம வழிபாட்டிலும் பார்க்க நாகவழிபாடு மிகப் பழமை வாய்ந்த தெனலாம். ஆகமங்கள் எண்வகை நாகங்களைக் கூறுகின்றன. எனினும், சேஷன் ஆதிசேஷன் என்று பல திறப்படக் கூறப்படும் நாகமே மிக மேலான தென்றும், இச் சர்ப்பத்தின் சுருளிலே தான் விஷ்ணுமூர்த்தியானவர் பள்ளி கொண்டனர் என்றுங் கூறும் புராணம். இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் மிக முக்கியமாக மலையாளத்திலும், தமிழகத்திலும் மக்களின் வாழ்க்கை சர்ப்பத்தோடு மிக நெருங்கிய தொடர்புற்றிருக்கிறது. அநேகர் சர்ப்பத்தின் கடியால் மரணமடைவதினாலும், சோலைகளும் ஆலயங்களும் நாகத்தின் வழிபாட்டுக்கென அமைவதாலும் இச் செந்துவை மறக்க இடமில்லை. சர்ப்பத்தின்மீது மக்கள் கொண்ட பயங்காரணமே இவ்வழிபாடு தோற்றியதற்கு ஏதுவாக இருந்த தென்று சொல்வர், ஆராய்ச்சியாளர்கள். காலாந்தரத்தில் இவ்வழிபாடு விருத்தியடைந்து முதன்மை பெற்றது. இதனால் சிற்சில மக்கள் நாகத்தைக் கொல்லத் துணியார்கள். நாகத்தைக் கொல்பவர்கள் பாவத்தை அடைவதோடு, பலவித துன்பத்துக்குட் படுவார்கள் என்றும் பண்டைய மக்கள் கருதினர். தென்னிந்தியாவில் சர்ப்ப வழிபாடு மிகப் பரந்து பட்டிருந்தது. இதனிலும், நாகவழிபாடு மிகப் பிரபல்ய மடைந்தது. மக்கட் பெறுபேறில்லாத பெண்கள் நாகவழிபாட்டினால் இப் பேற்றைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை வலியுற்றிருந்த காரணத்தாலே நாகவழிபாடு மிகமுக்கியத்துவம் அடைந்தது. பண்டைக் காலத்தில் அரச மரம் அல்லது வேப்பமரத்தின் அடியில் மேடையமைத்து நாககற்கள் பதிக்கப்பட்டு வழிபாடியற்றப் பட்டதை புராதன சின்னங்கள் தெரிவிக்கின்றன. புராதன விருட்ச, சர்ப்ப வழிபாட்டினாலேதான்வேம்பு, அரசு முதலிய விருட்சங்களுக்கும் நாகத்துக்கும் தொடர்பு ஏற்பட்டதென்று ஊகிக்கவும் கூடியதாயிருக்கிறது. தென்னிந்தியாவில் பல்வேறு பாகங்களில் மரங்களின் அடியில் காணப்படும் நாககற்கள் நாகவழிபாட்டின் விருத்தியைப் புலப்படுத்துவதோடு இருவகை வழிபாட்டின் தொடர்பையும் வலியுறுத்துகிறது. தமிழ் நாட்டில் கிராமப் பகுதிகளிலும், ஆலய வீதிகளிலும், சோலைகளிலும், குளக்கரையிலும், மரத்தடியிலும் நாககற்கள் தாபிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். மக்கட் பேறு வேண்டிய பெண்களால் தாபிக்கப்பட்ட நாககற்கள்தான் இவை. குழந்தைகள் பிறந்ததும், நாகத்தைப் பிரதிஷ்டை செய்து வணங்குவதுதான் இவர்களின் முதற்கடமையாகும். இவ்வழிபாட்டில், முதன் முதலாக நாகமொன்று கல்லில் சித்தரிக்கப்படும். பின்னர், இக் கல் நீரில் ஆறுமாதங்கள் போடப்பட்டு மந்திர உச்சரணங்களும் கிரிகைகளும் நடைபெறும். இக் கிரிகையைப் பிராணப் பிரதிஷ்டை


நாகபந்தம்—நயினாதீவு நாகேஸ்வரி கோயிற் தேரிலுள்ள செதுக்குச் சிற்பம்.



யென்பர். இதன் பின்பு இந்நாக கல் எடுக்கப்பட்டு ஒரு அரசமரத்தடியில் அல்லது வேப்பமரத்தடியில் தாபிக்கப்படும். பெரும்பாலும், இவ்விரு மரங் களும் ஒன்றுகவே நடப்படுகின்றன. இம் மரங் களைச் சுற்றி மேடைகள் அமைக்கப்பட்டு நாக கற் களுக்கு வழிபாடியற்றப்படுகிறது. இவ்விதந் தாபிக் கப்பட்ட நாகதெய்வத்தை தினமும் 108 முறை யாக 45 நாட்கள் சுற்றி வலம் வந்து வழிபடு வோர்கள் பிள்ளைப் பேற்றைப் பெறுவர் என்று பண்டைக்கால மக்கள் கருதினர். இவ் வகையில், சர்ப்ப வழிபாடு விருட்ச வழிபாட்டோடு நெருங்கிய தொடர்பு பூண்டிருத்தல் வெளிப்படையாகிறது.

இந்துமத நூல்கள் நாகங்களைப் பல்வேறு சம்ப வங்களோடு பிணைத்துக் கூறுகின்றன. திரிமூர்த்தி களில் ஒன்றுகவும், அழித்தற்றெழிலை மேற்கொ ண்ட உருத்திரர், கழுத்தில் நாகத்தைக் கொண்டு பொலிவதைச் சமய நூல்கள் இயம்புகின்றன. திருப் பாற்கடலில் அனந்தன் என்னும் பாம்பணையில் மகாவிஷ்ணு பள்ளி கொண்டதை விஷ்ணு புரா ணம் இயம்புகிறது. இந்து மதநூல்கள், அனந் தனைவிட நாகலோகத்து ஏழு நாகராசர்களை அதா வது, வாசுகி, தட்சகன், கார்க்கோடகன், அப்சன், மகாம்புசன், சங்காதரன், குளிகன் முதலியவற்றை யுங் குறிப்பிடுகின்றன. காணி, பூமியைத் தான மாக வழங்குவோர் இதன் பலாபலன்களை முன்ன தாக நிதானிக்க இவ்வெட்டு நாகராசர்களையுந் தியா னித்து வணங்குவர். எல்லாப் புராணக் கதை களிலும் பார்க்கத் தேவர்கள் திருப்பாற்கடலைக்கடை ந்த வரலாறு மிகரசமானது. அமிர்தம் வேண்டிய தேவர்கள் மந்தரைமலையை மத்தாகவும் வாசுகி யென்ற சர்ப்பத்தை நாணுகவும் கொண்டு திரு பாற்கடலைக் கடைந்தபோது, வருத்தமடைந்த வாசுகி நஞ்சைக் கக்குகையில் சிவன் நஞ்சையுண்டு தேவ ரைக் காத்தனர் என்று புராணங் கூறும். எல்லாக் கதைகளும் சர்ப்பத்தைப் புகழ்வதன்று. கண்ணபி ரானின் தீரச்செயல்களில் ஒன்று காளியன் என்ற சர்ப்பத்தை மிதித்துக் கொன்ற சம்பவ மாகும். யமுனு நதியிலிருந்து நஞ்சை உமிழ்ந்து அங்கு நீரை உட்கொள்ளும் பசுமந்தைகளைக்கொன்று வந்தது காளியன் என்னுஞ் சர்ப்பமாகும். இதனை உணர்ந்த கண்ணபிரான் காளியன் என்ற சர்ப்பத் தின் படத்தில் பாய்ந்து அதனைக் கொன்றனர் என்று புராணம் தொடர்ந்து இயம்புகிறது. இப் பல்வேறு புராண சம்பவங்களையெல்லாம் சிற்பங்கள் சித்தரித்துக் காட்டுகின்றன. சர்ப்பங்கள் நிதிக் குவியல்களில் விருப்பமுடையன என்றும், நச்சுப் பாம்புகள் வாயில் மதிப்புள்ள இரத்தினக் கற் களைக் கொண்டுள்ளன வென்றும், கிராமியக்கதை கள் கூறுகின்றன. பணக்காரனெருவன் தமது உரி மைக்கு உரியவரின்றி இறந்தால் தமது பொருள் களைக்காக்கச் சர்ப்பப்பிறவி எடுப்பர் என்று பண்டைய கால மக்கள் கருதினர். கொடிய நச்சுப்பாம்புகள் நஞ்சைக் கண்ணில் கொண்டனவென்று பண்டைய மக்கள் கருதினர் என்பதைக் கிராமியக் கதை களால் அறியக் கூடியதாயிருக்கிறது. இக் கதை களில் சில அலெக்சாண்டர் மன்னரையுந் தொடர்புபடுத்திக் கூறுகின்றன. கீழைத் தேசத்தை நோக்கிப் படையெடுத்த அலெக்சாண்டர் மாமன் னன் இந்தோபாரசீகப் பள்ளத்தாக்கில் இரத் தினக் குவியல்களைக் கண்டனரென்றும், பார்வையி னுலேயே கொல்லத்தக்க விஷப்பாம்புகள் இப் பள் ளத்தாக்கைக் காவல் புரிந்தனவென்றும் கதை கள் இயம்பும். அலெக்சாண்டர் தமது சாமர்த்தி யத்தினுல் தமது படையாட்களிடம் ஒளிமிக்க கண் ணுடியைக் கொடுத்து ஒருவர் பின் ஒருவராக அவர்

நயினுதீவு நாகேஸ்வரி கோயிலில் உள்ள சர்ப்ப வாகனம்.



களைப் பள்ளத்தாக்கில் செல்லச் செய்தமையின் பாம்புகள் கண்ணாடியைப் பார்த்த மாத்திரத்தே இறந்தொழிந்தன வென்றும் இக்கதைகள் தொடர்ந்து கூறும்.

சர்ப்பங்கள் இயல்பாகத் தீமை விளைவிக்கக்கூடியனவல்ல வென்றும் பண்டைக்கால மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனைப் புராணக் கதைகள் எடுத்துரைக்கின்றன. நாடு நகரங்களையெல்லாஞ் சூதாட்டத்தில் தோற்ற நளமகாராசன் கானகத்தே சென்று கொண்டிருக்கையில், எரியுங் காட்டில் கார்க்கோடகன் என்னுஞ் சர்ப்பம் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டனன். கருணை கூர்ந்து அச் சர்ப்பத்தினைக் காப்பாற்றினன். தப்பிய மாத்திரத்தே அச் சர்ப்பம் நளனைக் கடித்தது. அதனால் நளன் உடல் கருமையடைந்தது. இந் நிலையைக் கண்ணுற்ற நளன் தயங்கினன். எனினும், இக்கரிய நிறப் பொலிவு பிறரறியாவண்ணஞ் செய்தது. அதுவும் பகை அரசர்களிடமிருந்து தப்பவுஞ் செய்தது. சர்ப்பங் கடித்ததோடு நில்லாது, நளனுக்கு ஒரு சோடி ஆடையுங் கொடுத்தது. இவ்வாடைகள் நளன் முன்தோற்றத்தை யடையவும் உதவி புரிந்தது. மகாபாரதத்தில் கண்ணனால் காப்பாற்றப்பட்ட ஒரு சர்ப்பம் கைம்மாருக அவனுக்கு ஒரு அஸ்திரம் ஈந்ததை மகாபாரதக் கதை கூறும். இம் மகாபாரத யுத்தத்தில் கர்ணன் இவ் வஸ்திரத்தாலே கண்ணபிரானையே மலைக்கச் செய்தன என்று மகாபாரதந் தொடர்ந்து கூறும். ஈடின் பூங்காவில் ஏவா மகளை வசீகரித்த சர்ப்பத்தைப் பற்றிக் கூறும் விபிலியக் கதைகள் போன்று கிராமியக் கதைகளும் உண்டு. இதனால் சர்ப்பங்களின் சாபத்துக்குள்ளாகக் கூடாதென்று பெரியோர்கள் இளமகளிருக்குச் சொல்லிக் கொள்வார்கள். சர்ப்பத்திற்குத் தீமை விளைத்துச் சாபத்துக் குட்பட்டால் இப் பெண்கள் மலடாவார்கள் என்று இக்கதைகள் கூறும். நாகக் கற்களன்றி உயிர் நாகங்களும் இன்றும் இந்தியாவிலும் இலங்கையிலும் போற்றி வணங்கப்படுகின்றன. சோலைகளில் அமைந்த ஆலயங்களில் உயிர் நாகங்களுக்கென பிரத்தியேக வழிபாடு அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்விதங்களில், பிரபல்ய மடைந்த நாகவழிபாட்டைச் சிற்பங்களும் ஓவியங்களும் சித்திரிக்கத் தவறவில்லை. புராணங்கள் நாகத்தை மிருக ரூபத்திலும், மானிட தோற்றத்திலும் சிற்சில சமயங்களில் இரண்டுஞ் சேர்ந்த பாவனையிலும் கற்பனை பண்ணிக் கூறுகின்றன. இதே தன்மையில் நாகவடிவத்தை இந்திய சிற்பங்கள் சித்திரிக்கின்றன. இயற்கையான நாகரூபத்தில் அமையும் போது நாகவடிவம் பல்வேறு படங்களுடன் பொலிவதைக் காணலாம். இந்நாகம் மானிட ரூபமாக அமையில் தலையைச் சுற்றி நாகபடங்கள் சித்திரிக்கப்படுகின்றன. நாகமோடு மானிடரூபமுஞ் சேரும்போது மேற்பகுதி மானிட தோற்றத்தையும், கீழ்ப்பகுதி சர்ப்பச் சுருளையுங் கொண்டு பொலியும். மானிட ரூபமும் நாக வடிவுஞ் சேர்ந்த சிற்ப வடிவங்கள் இந்துச் சிற்பக்கலையில் இடம் பெறவில்லை. எனினும் பௌத்த சிற்பக்கலையில் சிற்சில இடங்களில் இவ்வகை உருவங்கள் இடம் பெறுகின்றன. இயல்பான நாகவடிவத்தில் அமைந்த சிற்பங்களே மிகப் புராதன காலத்தைச் சார்ந்தவை என்று கருதப்படுகிறது. மானிடரிலிருந்து வேறுபடுத்துவதற்காக தெய்வங்களைப் பல்வேறு கரங்களுடன் அமைப்பது போன்று, நாக வடிவங்களும் பல்வேறு படங்களுடன் சித்திரிக்கப்பட்டன. சிற்பக்கலையில் இச்சிரமுடிகள் சமமின்றி 3, 5, 7 படங்களுடன் காணப்படுகின்றன. சில உதாரணங்களில் சிருஷ்டி தத்துவத்தை விளக்க எழுந்த லிங்கம் விரிந்த நாகபடத்தில் அமைந்திருக்கும் இந்தியாவில், திருநெல்வேலி ஆதித்த நல்லூர் பகுதியில் செறிந்து காணப்பட்ட நாக கற்கள் வட்டவடிவமான கற்களில் செதுக்கப்பட்டு அமைந்தன. சிற்சில நாகங்களின் நாகச் சுருள் நடுவில் உருவமொன்று பதிப்பிக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் இவ்வுருவம் பாலகிருஷ்ணனின் உருவமாக இருக்கும். இன்னும் அலங்காரமான நாக கற்கள் இரு நாகங்கள் பிணையும் பாவனையில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. நாகங்கள் வைரக் கற்களைக் கொண்டுள்ளன என்ற கர்ணபரம்பரை வரலாற்றுக்கு ஏற்ப நாககற்களின் உச்சி கற்கள் பதித்த பாவனையைக் காட்டும். ஆரம்ப பௌத்த சிற்பக் கலையில் பல்வேறு நாகபடங்களுடன் நாகவடிவங்கள் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மிகப் பழமை வாய்ந்த சாஞ்சித் தூபிச் சட்டங்களும் நாகவடிவத்தைக் காட்டுகின்றன. இத் தூபியின் ஒரு பகுதியிலமைந்த சட்டம் காட்டு மிருகங்கள் புனித வெள்ளரச மரத்தைத் தரிசிப்பதை எடுத்து விளக்குகிறது. இவ்வனவிலங்குகளில் கருடனோடு நாகமுஞ் சேர்ந்து நிற்பது புலப்படுகிறது. இன்னொரு சட்டம் புத்தபெருமான் நாகத்தை யடக்கியொடுக்குவதைப் பல்வேறு நிலைகளில் காட்டிச் சொல்கிறது. ஆரம்ப பௌத்த கலை புத்தபெருமானைக் குறிப்பொருளாக அதாவது வெறும் ஆசன மூலமாகவும் நாகத்தை ஐந்து படங்களோடும்

புலப்படுத்துவதையும் காணலாம். சாஞ்சித் தூபியிலும் பார்க்க இன்னும் பழமைவாய்ந்த, அதாவது கி. பி. 2 ந் நூற்றுண்டில் கட்டப்பட்ட பார்ஹுத் தூபிச் சிற்ப வேலைப்பாடுகளும் நாகவடிவங்களோடு திகழ்கின்றன.

இப்பார்ஹுத்தூபியில், புத்த பெருமான் நாகத்தோடு சம்பாஷிக்கும் பாவனையில் அமைந்த காட்சியும் நாகசிற்பங்களின் தொன்மைக்குச் சான்ருக விளங்குகிறது. எனினும், தென்னிந்தியாவில் செறிந்து காணப்பட்ட நாககற்களே புராதன நாக வடிவங்களைச் சித்திரிக்கின்றன வென்று அறிஞர்கள் கூறுகின்றனர். பிற்காலம் பௌத்த சிற்பக் கலையில் மானிடதோற்றத்திலும் மிருக வடிவத்திலும் நாக வடிவங்கள் தோற்றங் கொண்டன. இந்தியாவில் இவ்வகைச் சிற்பங்களைப் பல்வேறு இடங்களிலும் காணக்கூடியதாயிருக்கின்றது. இதுவன்றி யாவா, சீனம், ஜப்பான் ஆதிய நாடுகளிலும் இவ்வகைச் சிற்பங்கள் தோற்றங் கொண்டன. பார்ஹுத் தூபியில் காவற் சிற்பங்களாக

நாக வழிபாடு.



அமைந்த பிற உருவங்களோடு நாகராச வடிவங்களும் புத்த பெருமானை அஞ்சலி செய்யும் பாவனையில் தோற்றங் கொண்டன. இலங்கையின் பௌத்த தூபிகளிலும், தேவாலயங்களிலும் இவ்வகை நாகராச வடிவங்களே பெரும்பாலும் காலச் சிற்பங்களாக அமைந்தன. இன்னோரன்ன வகைகளில் புராதன வழிபாடு பற்றி நாகவடிவங்கள் புலப்படுத்துவதில் இவை நாட்டின் கலைச் செல்வங்களாகப் போற்றப்படுகின்றன.

(இலங்கை வானெலிப் பேச்சு)

---

## மரமறுக்கும் மூன்று ஆலைகள்


(23 ம் பக்கத் தொடர்ச்சி)

"பலு" போன்ற மரங்களின் விலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளன. உதாரணமாக முன்னர் கன அடியொன்று ரூபா 4·25 சதமாக விற்பனை செய்யப்பட்ட "மில்லை" மரங்கள் இப்பொழுது கனஅடியொன்று ரூபா 3·25 சதமாக விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வினத்தைச் சேர்ந்த அறுத்த மரம் கன அடி யொன்று ரூபா 7.00 ஆகவிற்பனையாகும். (கொழும்பில் ரூபா 8.50) ஒப்பிட்டுக் கூறப்புகின், வெளிச்சந்தையில் இவ்வின மரத்தின் விலை கனஅடி ஒன்றுக்கு சுமார் ரூபா 18 முதல் ரூபா 20 வரையிலுமாகும்.

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

இதே நேரத்தில் முதிரை, கருங்காலி போன்ற "சுகபோக" மரங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. விசேஷமாக முதிரை மரம் வெளிநாடுகளில் நல்ல விலைக்கு விற்பனையாகின்றது. எனவே உண்மையான உபயோகிப்பாளர்கள் இச்சுகபோக மரத்தை இலங்கையில் கூரைக்கும் கதவு, ஜன்னல் சட்டங்களுக்கும் உபயோகிப்பதைத் தடுப்பது நாட்டுக்கு நற்பயனளிக்கும்.

இலங்கையில் காணப்படும் பல்வேறு இன முதிரை மரங்கள் உலகின் வேறெப்பாகத்திலும் இல்லை. எனவே எமது வனபரிபாலனப் பகுதி இலங்கையிலுள்ள முதிரை வனங்களைப் பாதுகாத்து அவற்றை என்றென்றும் செல்வம் தரும் ஒரு வழிவகையாக மிகவும் கவனமாக பயன்படுத்திக் கொள்ள உத்தேசித்துள்ளது.



நல்லூர்க் கந்தசாமி கோயில் தர்மகர்த்தா உயர் திரு. சண்முகதாஸ் மாப்பாண முதலியார் பங்குனி உத்திரத்தன்று 'பாற்காவடி' எடுக்கும் காட்சி.

# நல்லூரில் பங்குனி உத்திரம்

(கு. ச.)

ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் சைவ ஆலயங்களில் பங்குனி உத்தரத் திருவிழா நடப்பதைக் கண்டு தரிசித்து பயன்பெறும் வழக்கம் சைவ நன்மக்களிடையே காணப்படுகின்றது. இத்திருவிழாவின் வரலாறு மிகவும் முக்கியமானது.

பிறப்பிறப்பற்று அநாதியாயுள்ள சிவபெருமான் ஆன்மாக்கள்மீது கொண்ட பரங்கருணை காரணமாக மானிடச் சட்டையில் தோன்றி அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்து காண்பித்தார். இதன் விரிவினைப் பரஞ்சோதி முனிவர் பாடியருளிய திருவிளையாடற் புராணத்திற் காணலாம். அத்திருவிளையாடல்களில் ஒன்று அவர் தடாதகைப் பிராட்டியாரை —சிவகாமியம்மையாரைத் திருமணஞ்செய்தது. இது பங்குனி உத்தரம் பௌர்ணமியில் நடந்தது. சிவகாமியம்மை என்ற பெயர் சிவபிரானை மணந்ததால் வந்தது என்பர் பௌராணிகர். இவ்வம்மையாருக்கு உமை, மீனாட்சி, சத்தி, மகேசுவரி முதலிய திருநாமங்கள் உண்டு. அம்மையார் மலையத்துவச பாண்டியன் பெற்ற பெருவாழ்வாக அவதரித்தார். அம்மையார் மதுரையில் இருந்து செங்கோல் ஒச்சினார். இவர் ஆட்சி செலுத்திய நாடு குமரிக்கண்டம் எனப் பெயர் பெற்றது. அம்மையார் மணிமுடிதரித்து ஆட்சி செலுத்தி திக்கு விஜயஞ் செய்தபோது சிவபிரான் தென்பட்டார். இருவரும் மதுரைக்கு வந்து திருமணஞ்செய்ய ஏற்பாடு செய்து கொண்டனர். அவ்வாறே பங்குனி உத்திரத்தில் திருமணம் நடந்தது. சிவபிரான் திருமணத்துக்குப் பின்னர் சோமசுந்தர பாண்டியனாகத் தென்பாகத்தை ஆண்டாராதல் வேண்டும். சிவபெருமான் மக்கள் ஈடேற வழி காட்டும் பொருட்டு திருமணம் நடத்திய திருவிளையாடலைப் புரிந்ததனால், ஆணும் பெண்ணும் மணஞ் செய்து வாழ்வதே உலகில் இயற்கையால் அடையும்

இன்பம் என்பது வலியுறுத்தப்படலாயிற்றது. ஜனகனைப் போல, வள்ளுவரைப் போல, காந்தியடிகளைப் போல இல்லறத்திலிருந்து கொண்டே முத்திப் பேறடையும் பாதையிற் செல்லலாம் என்பதை இத் திருவிளையாடல் நமக்கு உணர்த்துகிறது.

இனி, பங்குனி உத்தரத்தன்றுதான் மன்மதன் அநங்கனான். சிவபிரான் யோகத்தில் அமர்ந்திருந்த பொழுது தாருகாசுரன் அதனைக் கலைக்க எண்ணி மன்மதனை ஏவ, அவன் தன் வில்லால் மலர்ப் பாணங்களைத் தொடுக்க, சிவபிரான் நிட்டையிலிருந்து கலைக்கப்பட்டார். அவர் கண்விழித்துப் பார்த்ததும் மன்மதன் சாம்பலானான். பின் அவன் மனைவி சிவபிரானிடம் அழுது வேண்டி அருள்புரியுமாறு பிரார்த்தித்தாள். பிரார்த்தனைக்கிரங்கும் பெருமான் " பெண்ணழகியே ! உன் கணவன் உன் கண்ணுக்கு மட்டும் தெரிவான்; அவனுடன் நீ சுகித்திருப்பாயாக " என்று அருளினார்.

### நல்லூர்க் கந்தசாமி கோயிலில்

பங்குனி உத்தரம் சிவாலயங்களிற் சிறப்புற நடைபெற்று வருகின்றதென முன்னர்க் குறிப்பிட்டோம். ஆனால் நல்லூர்க் கந்தசாமி கோயிலில் அன்றைய தினத்தில் வேறொரு முக்கிய நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றது. அன்றுதான் கோயில் மனேஜர் காவடியெடுத்துச் செல்லும் வைபவம் நடைபெறுவது. இக்காலத்திலே காவடியெடுப்பதும் தீமிதிப்பதும் பக்தியுடன் கலந்து நடைபெறுவதாகத் தெரியவில்லை. கதிர்காமத்திலே இந்துக்களல்லாத சிங்கள ஆண்களும் பெண்களும் காவடியெடுப்பதைக் காண்கிறோம். பழனி ஆண்டவருக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் காவடி யெடுப்பதை யாவருமறிவர். நல்லூர் கந்தசுவாமி கோயிற்றிருவிழாவின்போது குகனடியார்கள் காவடியெடுப்பதையும் காண்கின்றோம். ஆனால் பங்குனி உத்தரத்திலன்று காவடியெடுப்பவர் ஒரே யொருவர்தான். நல்லூர் கந்தசாமி கோயிலில் நித்திய நைமித்தியங்கள் காலந் தவறாது நடைபெறுகின்றன என்ற புகழ் நாடெங்கணும் பரவுமாறு செய்து வருபவரும் முருகன் திருக்கோயிலில் எந்த எந்த வகையிலே சீராக்கிப் பக்திவெள்ளப் பெருக்கை ஏற்படுத்த சதா சிந்தித்து முயன்று கொண்டிருப்பவருமாகிய கோயில் மனேஜர் காவடியெடுப்பது பங்குனி உத்தரத்திற்றான். காவடி எடுக்க வேண்டும் என்பதற்காகவே மூன்று மாதங்கள்வரை தாடி வளர்த்து முகச்சவரம் செய்யாது விரதம் அனுட்டிக்கிறார். பங்குனி உத்தரத் தன்று தலையை வழித்து முகத்தைச் சவரம்செய்து. செந்நிறப் பட்டுத் தரித்து கழுத்திலே கௌரிசங்கரும், மொட்டைத் தலையிலே உருத்திராக்கமணி மாலையும் தரித்து, நல்லூர் சமஸ்தான இசைவல்லுநர் முத்தமிழ் மணி சி. எஸ். மணி பாகவதரும் தேவாரம் ஆறுமுக ஆசிரியரும், பக்திப்பாடல்களை ஓதிக்கொண்டு முன்னே செல்ல, காவடியாட்டத்தில் பேர்பெற்ற பக்தர் இருவர் தாளத்துக்கேற்ப காவடியுடன் ஆடிச் செல்ல, மேள வாத்தியம் முழங்க பக்தர்கள் " அரோகரா, அரோகரா " எனக் கோஷமிட, பட்டுக்குடை ஆலவட்டம், சந்திரப்பிறை, சூரியப்பிறை முதலிய கொடிகுடை ஆலவட்டங்களைத் தாங்கினோர் முன் செல்ல, செந்நிற மேனியும் கொழுத்த உடம்பும், ஆறுமுகனது தாளாகிய அரவிந்தம் அரும்பிடும் உள்ளத்தடமும், பத்தியுள்ளமும் ஒருங்கே யமையப்பெற்ற ஸ்ரீ சண்முகதாஸ் மாப்பாண முதலியார் காவடியைத் தாங்கி மெல்ல நடந்து செல்ல, பக்கத்தில் அவருடைய அருமை மகள் பாற்செம்பினைத் தூக்கிச் செல்ல, பக்தர் குழாம் வலப்புறமும் இடப்புறமும் பின்புறமும் பக்தியுடன் தொடர்ந்து வர, முருகன் ஆலய மணி எட்டு அடிக்க, காலையில் ஆதவனும் தண்ணொளி பரப்பி ஆசீர்வதிக்க, காவடி ஊர்வலம் மனேஜருடைய இல்லத்திலிருந்து பழனியாண்டவர் கோயில் நோக்கி நகர்வது கண்கொள்ளாக் காட்சியாகும். பழனியாண்டவருக்குத் தீபாராதனை நடைபெற்றுவர மனேஜர் வெளி வீதிவலம் வந்து முருகன் சந்நிதானத்தை அடைந்து காவடியை யிறக்கி சாவகற்பம் செய்து கும்பாபிஷேகத்தினை நடத்திக் கோயிற் பூசை கண்டு வீடு திரும்புவார். கோயிலுக்கு முதலாளியாக இருந்தாலும், கோயிலை உறையும் முருகனுக்குத் தான் ஒரு அடியான், அவன் ஏவலைப் பக்தியுடன் பூர்த்தி செய்யும் அலுவலாளன் என்ற மனப்பான்மை தன்னிடத்தே வேரூன்றி நிற்கவும், என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற முறையில் வாழ்வை நடாத்தவும், இந்தத் தினத்தில் நடைபெறும் வைபவம் மனேஜர் அவர்களுக்கு நினைவுறுத்திய வண்ணமிருக்கின்றது. அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தனை வந்தனைசெய்து எமது அகந்தையை அகற்றுவோமாக.

# புத்தாண்டு வாழ்த்து

**மஹாகவி**

குத்துவிளக் கேற்றுங்கள் ! குங்குமப்பொட்
டிடுங்களடி ! குமுத வாயைப்
பொத்துதிரும் முத்துகளைப் பொறுக்கியள்ளிப்
பூட்டஇதோ பொழுது ? போங்கள்,
புத்துடைகள் தோள்நழுவப் புதுவிருந்தை
வரவேற்க ஓடு வீர்கள் !
வைத்ததடி உள்ளேஅவ் வரும் ஆண்டு,
வளங்கோடி கொணரும் ஆண்டே !

சிற்றிடைகள் அசையட்டும் ! சிலம்பினங்கள்
அலம்பட்டும் சிறிய பாதத்(து) !
அற்புதங்கள், எக்காலும் அழியாத
தமிழ்ப்பாக்கள் அவைகேட் கட்டும்
கற்குழையும் படி ! எமது கன்னியர்காள்,
இதோவாயிற் கதவைத் தட்டும்
நெற்குலையும், நறுநெய்யும், நெடுநிதியும்,
நிறைவாழ்வும் கொணரும் ஆண்டே !


கங்குலின்நீள் கருமையினைப் புறங்காட்டும்
இளங்காலை போல வந்த
தெங்களுக்கோர் புதுஆண்டே ! எவருளமும்
மலரட்டும் ! இன்றை நாளில்

சிங்களமும் தேன்தமிழும் சேர்ந்திலங்கை
சிறக்கவழி பிறக்க வென்று
பொங்கலிடும் அவதியிலே பொட்டழிய
வியர்கிறதா, பரவாய் இல்லை !

கார்முகிலை மலை எழுந்து வழிமறிக்க
அதுகடலாய்ப் பரந்து பாய்ந்தே
ஏருழவர் நிலம்நினைக்கும் ! எட்டாத
திட்டுகளில் நின்றும் வீழ்ந்தே
ஓரிருசில் லுருட்ட இனி உயிர்ப்புண்டாம்,
ஒளியுண்டாம், உயர்வுண் டாகும் !
ஊர்களிப்புற் றுடல்சிலிர்க்க உதித்துள்ள
புத்தாண்டை வாழ்த்து வீர்கள் !

சுற்றிவந்து கைகொட்டிச் சுமைகழன்று
வீழ்ந்ததெனச் சொல்லிச் சொல்லி
நெற்றியில்மைக் குழலாட, நேரிழையீர்,
கும்மியடிப் பீர்கள் ! நேற்றோ
டற்றதுநம் துயர்முழுதும் ! ஆனந்தம்
ஆயிற்றென் குடிப் பாடும் !
வெற்றிகளை விளைக்கவரும் ஏவிளம்பிக்
கெமதாழ்ந்த வாழ்த்தைக் கூறும் !

இலங்கைக்கும் சீனவுக்குமிடையில் ஏற்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தில் இரு நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளும் கையொப்பமிடுகின்றனர்.





கதிர்காமத்திற்குப் பக்தியுடன் வழிபடச்செல்லும் ஆண்களும் பெண்களும் தங்கள் நேர்த்தியைப் பல வழிகளில் பூர்த்திசெய்வது வழக்கம். பெண்மணி ஒருத்தி காவடியெடுத்து கதிர்காமக் கந்தனுக்கு தனது நேர்த்தியைப் பக்தி சிரத்தையுடன் நிறைவேற்றுகிறுர்.

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

| | | விலை ரூ ச. | தபாற் செலவு ரூ ச. |
|---|---|---|---|
| 1. | அத்தியாயம் 60 கார்ச் சாரதிகள் சம்பந்தமான ஒழுங்குகள் ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம் .. .. | 0 10 | 0 10 |
| 2. | அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் சட்டம் .. .. | 1 30 | 0 35 |
| 3. | அதிகாரம் 95—கலியாணப் (பொதுச்) சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 4. | (i) 1940 ம் ஆண்டின் 15 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. ..<br>(ii) 1944 ம் ஆண்டின் 49 ம் இலக்க ஷெ ..<br>(iii) 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க ஷெ ..<br>(iv) 1946 ம் ஆண்டின் 34 ம் இலக்க ஷெ .. | 0 50 | 0 10 |
| 5. | அத்தியாயம் 104—தத்துவப் பத்திரங்கள் சட்டம் .. .. | 0 20 | 0 10 |
| 6. | அத்தியாயம் 115—வீட்டுப் பணியாளர் பதிவுக் கட்டளைச் சட்டம் .. | 0 30 | 0 10 |
| 7. | அத்தியாயம் 116—தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம் .. .. | 0 80 | 0 20 |
| 8. | அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டம் .. | 0 40 | 0 10 |
| 9. | அத்தியாயம் 198—கிராமச் சமுதாயச் சட்டத்தின் மறுபதிப்பு .. | 1 30 | 0 35 |
| 10. | 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்க கிராமச் சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 11. | 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலங்கையிலே மூடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்துதலுக்காகவும் பராதீனப் படுத்துதலுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. .. | 1 05 | 0 35 |
| 12. | 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்க கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. .. | 0 45 | 0 20 |
| 13. | 1939 ம் ஆண்டின் 32 ம் இலக்க பிரசவ உதவிப் பணக் கட்டளைச் சட்டம் | 0 30 | 0 20 |
| 14. | 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச் சபைகள் சட்டம் .. | 1 10 | 0 35 |
| 15. | 1942 ம் ஆண்டின் 45 ம் இலக்க தொழிற்சாலைகள் சட்டளைச் சட்டம் .. | 2 75 | 0 35 |
| 16. | 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்க ஒரு ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 10 |

**குறிப்பு.**—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.